பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

விலை ரூபா 1-00

# ஈழநாடு

THE EELANADU

மலர் 24 புரட்டாதி 28 ஜுல்கஜ் 26 இதழ் 243

யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 14—10—82

## ரூ.25 லட்சம் பொருட்கள் கடத்தல்முயற்சி தோல்வி!

[கொழும்பு]

சிங்கப்பூரிலிருந்து 25லட்ச ரூபா பெறுமதியான பொருட்களை இலங்கைக்கு கடத்த எடுத்த முயற்சி ஒன்று சுங்க அதிகாரிகளினுல் முறியடிக்கப்பட்டது.

3 மாதத்திற்கு முன்னர் அன்பளிப்பாக 24 பார்சல்கள் இங்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தன.

இந்தப்பார்சல்களிலிருந்த முகவரியில் சந்தேகம் கொண்ட சுங்க அதிகாரிகள் நேரில் வந்து பார்சல்களைப் பெற்றுக்கொள்ளுமாறு அறிவித்திருந்தனர். பார்சலில் இருந்த முகவரி அனைத்தும் பொய்யானவை என விசாரணையில் தெரியவந்தது.

இதனுல் சுங்க அதிகாரிகள் இன்று பார்சல்களை திறந்து பார்த்தனர். அவற்றுள் 1600 கைக்கடிகாரங்கள் 1500 ரிசேட்டுகள் 6500 சிகரட் லைட்டர்கள் பெருந்தொகையான றேந்தைகள் கால் மேசுகள் காணப்பட்டன.

இப்பொருட்களை, இங்கிருந்து இந்தியாவிற்கு கடத்திச் செல்லவே சிங்கப்பூரிலிருந்த அனுப்பப்பட்டதாக நம்பப்படுகிறது.

# பயங்கரவாதத் தடை சட்டத்தின் கீழ்

# திருநெல்வேலி வங்கி கொள்ளை வழக்கு

## இராணுவமுகாம் டாக்டரே எதிரியை பரிசோதிப்பார்

(கொழும்பு)

திருநெல்வேலி மக்கள் வங்கிக் கொள்ளை வழக்கில் எதிரிகளில் ஒருவரான ஞா. ஞானசேகரம் நேற்றுக் கொழும்பு மேல் திமன்றத்தில் நீதிபதி திரு மூனமலே முன்னிலையில் ஆஜர்செய்யப்பட்டார்.

ஒற்றைக்கால் நொண்டியபடி தடி ஊன்றிக்கொண்டு பலத்தபாதுகாப்புடன், பனுகொடை இராணுவ முகாமிலிருந்து ஞானசேகரம் நீதிமன்றத்துக்கு கொண்டு வரப்பட்டார்

எதிரி சார்பில் ஆஜரான சட்டத்தரணி எஸ். நவரத்தினம் [கரிகாலன்] எதிரிக்கு அநேக வருத்தங்கள் இருப்பதால் அவரை வெளியிலிருந்து வைத்திய நிபுணர் ஒருவர் பரிசோதனை செய்து அறிக்கை சமர்ப்பிக்க வேண்டுமெனக் கோரினுர்.

இதனை நிராகரித்த நீதிபதி இராணுமுகாம் டாக்டரே பரிசோதித்து அறிக்கை வழங்க வேண்டுமெனக் கட்டளையிட்டார். வைத்தியநிபுணர் ஒருவர் பரிசோதனை செய்ய வேண்டுமென இராணுவ டாக்டர் விதப்புரை செய்தால் அது பற்றி ஆலோசிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

இவ்வழக்கில் மற்றும் இரு எதிரிகளும் நீதி மன்றத்தில் ஆஜராக வில்லை. இவர்கள் தலைமறைவாகிவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

[8ம் பக்கம் பார்க]

## சிறிமாவுக்கு அவசரத் தந்தி!

[யாழ்ப்பாணம்]

தினசரிப் பத்திரிகையொன்றில் வெளியான செய்தி தொடர்பாக தகுந்த விளக்கம் அளிக்குமாறுகோரி, சிறிலங்கா சுதந்திரக்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவுக்கு அவசரத் தந்திகள் யாழ்ப்பாணத்திலிருந்து அனுப்பப்பட்டுள்ளன.

[8ம் பக்கம் பார்க்க]

## லயன்ஸ் ஆதரவில் நகைச்சுவைக் கதம்பம்

[யாழ்ப்பாணம்]

யாழ். லயன்ஸ் கழகத்தின் ஆதரவில் நகைச்சுவைக்

[8-ம் பக்கம் பார்க்க]

### யாழ். மாவட்டத்தில்

## 4962 பேருக்கு தபால்மூலம் வாக்களிப்பதற்கு அனுமதி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் 4,962 அரசாங்க ஊழியர்கள் தபால்மூலம் வாக்களிப்பதற்கான அனுமதியை பெற்றுக்கொண்டுள்ளனர். யாழ். மாவட்டத்தில் 5433 ஊழியர்கள் தபால்மூல வாக்களிக்கும் விண்ணப்பங்களை தேர்தல் ஆணையாளருக்கு அனுப்பியிருந்தனர். இவற்றில் பிழையாக நிரப்பப்பட்ட 471 விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டன.

4962 ஊழியர்கள் வாக்களிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

தற்பொழுது ஒவ்வொரு காரியாலயங்களிலும் துரிதமாக வாக்களிப்பு நடைபெற்று வருகிறது.

கடந்த திங்கட்கிழமை ஆர

(8-ம் பக்கம் பார்க்க)

## பெரி. சுந்தரலிங்கம் காலமானுர்

[கொழும்பு]

சட்டத்தரணி பெரி. சுந்தரலிங்கம் [43 வயது மாரடைப்பினுல் காலமானுர்

1960-ம் ஆண்டு 'வீரகேசரி' சிறப்பு நிருபராகப் பணிபுரிந்து பத்திரிகை உலகில் நுழைந்த பெரி சுந்தரலிங்கம் பின்னர் சட்டத்தரணி பயில முயற்சித்தபோதிலும், பத்திரிகைத்துறையிலிருந்து அவரால் விலகமுடியவில்லை.

1965-ம் ஆண்டு 'செய்தி' தமிழ் வார ஏட்டின் ஆசிரியராகப் பணியாற்றியபின்னர், சொந்தமாக 'எம் ஜி ஆர்.' எனும் பெயரில் சஞ்சிகை ஆரம்பித்து புரட்சிகரமான கருத்துக்களைப் பத்திரிகையில் வெளியிட்டார்.

1969-ல் ''ஈழநாடு'' பத்திரிகையின் கொழும்பு நிருபராகவும் பாராளுமன்ற நிருபராகவும் சிறப்பாகச் சேவையாற்றிய திரு பெரி சுந்தரலிங்கம், சிவில் சட்டத்தரணியாகி, சட்டத்தரணி என் சத்தியேந்திராவின் ஜுனியராகக் கடமையாற்றினுர்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் சட்ட ஆலோசகராக கடைசியக் பணியாற்றிய திரு. பெரி சுந்தரலிங்கம் வழக்கு சம்பந்தமாக நேற்று முன்தினம் அட்டன் சென்றிருந்தபோது மரடைப்பினுல் காலமானுர். அன்னுரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 97, ஸ்ரோஸ் வீதி, கிருண்ட்பாஸிலுள்ள அன்னுரது இல்லத்தில நடைபெறும்.

லொறிகள் தேவை

வவுனியா பாவற்குளத்தில் இருந்து காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலைக்கு கல் ஏற்றி வருவதற்கு லொறிகள் தேவை.

கீழ்க்காணும் விலாசத்தில் தொடர்புகொள்ளவும்:-

V.M. சண்முகம் & பிறதர்

இல. 85, ஆஸ்பத்திரி வீதி,

யாழ்ப்பாணம்.

4821

## "தமிழீழ அமைப்பு முயற்சிக்கு லிபியா ஒரு வழிகாட்டியாக அமையும்"

### நாடு திரும்பிய 'அமிர்' தகவல்

[கொழும்பு]

''தமிழ் ஈழம அமைக்கும் நமது முயற்சிக்கு லிபியாவின் பொருளாதார அரசியல் அமைப்புமுறைகள் வழிகாட்டியாக அமைந்திருக்கிறது''

லிபியா அரச அழைப்பை ஏற்று அங்கு சென்ற எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம், நேற்றுமுன்தினமிரவு நாடுதிரும்பிய பின்னர் மேற்கண்டவாறு செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் நேற்று முன்தினமிரவு 10-30 மணிக்கு நாடு திரும்பினுர்.

திரு. அமிர்தலிங்கம் செய்தியாளர்கள் மத்தியில் நேற்று மேலும் தெரிவித்ததாவது: ''இந்தப்பயணம் மிகவும் பயனுள்ளதாக அமைந்துள்ளது. லிபியாவின் அரசியல் பொருளாதார அமைப்புக்களை நேரில் பார்க்கும்வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. மிகவும் பயனுள்ளதாக அமைந்திருந்தது.

லிபியா தலைவர் கடாபியை பயங்கரவாதி என்று ஏகாதிபத்தியவாதிகள்கூறுகின்றனர். இதுவெறும் பிரசாரமாகும். அவர் உலகத் தலைவர்களில் ஒருவர். இஸ்லாமிய மதஅடிப்படையில் அவர் நாட்டைக் கட்டி எழுப்ப முழுமூச்சாக பணியாற்றிவருகிறுர் அவர் ஒரு கடும்உழைப்பாளி. ஆண்களுக்கும், பெண்களுக்கு சமத்துவம் வழங்கினுர். ஏழ்மையை ஒழிக்க பாடுபட்டு வருகின்றுர். அவரிடமிருந்தும் அந்த நாட்டிடமிருந்தும் நிறைந்த விஷயங்களைப்புரிந்து கொண்டேன், இவை நமக்கு நிச்சயம் வழிகாட்டும்'' என்றுர். [இ]

அரிய சந்தர்ப்பம்

Computer Programming

BASIC—COBAL—FORTRAN R.P.G. II

எமது நிறுவனத்தில் உள்ள Computer இல் செய்முறை பயிற்சியளிக்கப்படும்.

றேடியோ - டெலிவிசன், ஏயர்கொண்டிசனிங்
HOTEL MANAGEMENT, SPOKEN ENGLISH

மீண்டும் ஒரு புதிய வகுப்பு ஆரம்பம்

17 - 10 - 1982

விபரங்களுக்கு உடன் நேரில் வரவும்

The School of Computer Studies

52/1, சனகரத்தினம் கட்டிடம்
(வீனஸ் றெக்கோடிங் பார் மேல்மாடி)
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 4808

# வரி விளம்பரம்

### விற்பனைக்கு

உரும்பிராய் Q. C தியாகலிங்கம் வீட்டிற்கு அருகாமையில்9 பரப்புக்காணி விற்பனைக்குண்டு.விபரங்கட்கு தொடர்பு கொள்ளவும். 37, பிரப்பங்குளம்ரோட், வண்ணார்பண்ணை யாழ்ப்பாணம். செ. நடராசா உரும்பிராய் வடக்கு, உரும்பிராய். 4812

## நெல் விற்பனைக்கான கேள்வி விண்ணப்பம் கோரல்

முத்துஐயன்கட்டு ப. நோ. கூ. சங்கத்தால் கிழ்க்காணும் இனங்களையுடைய நெல் விற்பனைக்கு கேள்வி விண்ணப்பம் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் யாவும் சங்கத்தினுல் வழங்கப்படும் விண்ணப்பத்தில் மீளளிக்கப்படாத வைப்பாக ரூபா 10/-ம் மீளப்பெறக்கூடிய வைப்புப் பணமாக ரூபா 250/- செலுத்தி 22-10-82ம் திகதி நண்பகல் 12-00 மணிக்குமுன் கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபால் மூலமோ, அல்லது சீல் வைக்கப்பட்டோ சேர்ப்பித்தல் வேண்டும். கேள்விப் பத்திரங்கள் 22-10-82 பி. ப. 2-00 மணிக்கு பரிசீலனை செய்யப்படும். விரும்புவோர் சமூகம் கொடுக்கலாம். நெல்லைப் பார்வையிட விரும்புவோர் சங்க அலுவலக நேரத்தில் பார்வையிடலாம்.

சிவப்புஇனநெல் 28357 கிலோ
வெள்ளைஇனநெல் 4743 ,,

பொதுமுகாமையாளர்,
முத்துஐயன்கட்டு
ப. நோ. கூ. சங்கம்,
ஒட்டுசுட்டான். 4824

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க


## பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

[இல84அ- பிரிவுகள் 524, 532]

முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தில்

காலஞ்சென்ற துணுக்காய், கொக்காவில் வீதி, செல்லையா மகள் செல்லம்மா என்பவரின் மரணசாதனத்தின் / மரணசாதனமில்லாச் சொத்தின் விடயத்தில்

— மரணமெய்தியவர்

மரணசாதன நியாயாதிக்கம்; இல; 16

(1) சின்னையா செல்லப்பா
(2) பெண் சிவக்கொழுந்து 637, கொக்காவில் வீதி துணுக்காய்.

— மனுதார்

எதிர்

அருணாசலம் அமிர்தலிங்கம் கச்சாய் வீதி, கொடிகாமம்.

— பிரதிவாதி

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதனவழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணசாதனத்தை / எண்பிப்பதற்காக மரணச் சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1982-ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 26-ஆந் நாளன்று முற்பகல் 9-00 மணிக்கு இந் நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்கு காரணங்காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றர்.

நீதிமன்றக் கட்டளைப்படி
சி. கமலேஸ்வரன்
பதிவாளர்

1982-ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 7-ம் நாளாகிய இன்று தேதியிடப்பட்டது.

வரைவு:

க. வ. சுப்பிரமணியம்,
சட்டத்தரணி. 4816

# பொது வேலைநிறுத்த முஸ்தீபு!

வார்ஸோ, அக். 12

போலந்து இராணுவ ஆட்சியாளரினுல் மேறகொள்ளப்பட்ட தொழிற்சங்கத் தடையையும், கலைப்பையும் எதிர்த்து, போலந்தில் தொழிலாளர் பொது வேலைநிறுத்தத்தை மேற்கொள்ள முடிவுசெய்துள்ளனர்.

கப்பல் கட்டும் தொழிலாளர்கள் நேற்று கப்பல்கட்டும் தளங்களை விட்டு வெளியில் கூடிநின்றபோது, போலந்துப் பொலிஸாரால் பலவந்தமாகக் கலைக்கப்பட்டனர்.

கப்பல் கட்டும் தொழிலாளரின் வேலைநிறுத்த நடவடிக்கைகளினுல் 'ஹிரான்ட்' நகரத்தைப் பொலிஸார் மூடியுள்ளனர். [உ]

## பின்னுறுதிக் கட்டளை

மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்

அச்சுவேலி தெற்கைச் சேர்ந்த காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை பரஞ்சோதி என்பவரின் மரணசாதனமற்ற மரணச் சொத்துக்கள் சம்பந்தமான விடயத்தில்.

—மரண மெய்தியவர்

கணபதிப்பிள்ளை பரஞ்சோதி கைம்பெண் ஜெயமணி, அச்சுவேலி.

—மனுதாரர்

எதிராக

மரணச்சொத்து நியாயாதிக்கம் ரி / 137

(பராயமற்றவர்) 1. பரஞ்சோதி இளங்குமரன், தனது வழக்குப் பாதுகாவலர்
2. வேலுப்பிள்ளை செல்லத்தம்பி மூலமாக இருவரும் அச்சுவேலி தெற்கு.

—எதிர்வாதிகள்

இவ்விடயம் 1982ம் ஆண்டு ஆனி மாதம் 13ம் திகதிமல்லாகம் மாவட்ட நீதிபதி திரு. சி. வி. விக்னேஸ்வரன் அவர்கள் முன்னிலையில் மனுதாரர் சார்பில் சட்டத்தரணி திரு ஜி.வி. பாலசிங்கம் அவர்கள்தோன்றி, 1982-6-3ம் திகதி கொண்ட மனுவிலும் சத்தியக்கூற்றிலும் கூறப்பட்ட கூற்றுக்கள் பார்த்த மாத்திரத்திலே நிரூபிக்கப்பட்டுள்ளதென திருப்தி அடைந்ததின் பேரில்,

1982ம் ஆண்டு புரட்டாதி மாதம் 1ம் திகதி காலை 9 மணிக்கு ஆ நீதிமன்றத்தின் முன் எதிர்மனுதார்கள் எதிர்க் காரணம் காட்டினுலன்றி மேற்கூறிய காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை பரஞ்சோதியின் விதவை என்ற முறையில் காலஞ்சென்றவரின் மரணச் சொத்து நிர்வாகப் பத்திரம் பெற உரித்துடையவரென்றும் மரணச்சொத்து நிர்வாகப்பத்திரம் அவருக்கு வழங்கப்படுமென்றும் இத்தால் கட்டளையிடப்படுகின்றது. மேலும் பராயமற்ற 1ம் எதிர்வாதியின் வழக்கில் பாதுகாவலராகமேற் சொல்லிய 2ம் எதிர்வாதி நியமிக்கப் பட்டுள்ளாரெனவும் இத்தால் கட்டளையிடப்படுகின்றது.

மேலும் பராயமற்ற 1ம் எதிர்வாதியை மேற்சொல்லிய 2ம் எதிர்வாதி 3-9-82ல் மன்றில் தெரிவித்தல் வேண்டும்.

1982ம் ஆண்டு ஆனி மாதம் 13ந் திகதி.

(ஒப்பம்)
க. குணரத்தினம்,
பதில் மாவட்ட நீதிபதி,
மல்லாகம்.

தயாரித்தவர்:
க. வ. பாலசிங்கம்,
மனுதாரின் சட்டத்தரணி.

1-9-82 பின்னுறுதிக் கட்டளைக்கு எதிர்காரணம் காட்டுவதற்கு 3-11-82 வரை நீடிக்கப்படுகின்றது.

(ஒப்பம்)
க. குணரத்தினம்,
பதில் மாவட்ட நீதிபதி. 4817

## நியமனம்

[பண்டத்தரிப்பு]

சங்கானை அரசினர் வைத்திய சாலையின் புதிய வைத்தியப் பொறுப்பதிகாரியாக டாக்டர் கே. இராசகுலசிங்கம் சுகாதார திணைக்களத்தினுல் நியமிக்கப்பட்டுள்ளார்.

நீண்டகாலமாக வைத்திய பொறுப்பதிகாரியின் பதவி இங்கு காலியாக இருந்தது.

# சுவீப் முடிவுகள்

(கொழும்பு) தலைமைச் செயலகத்தில் இழுக்கப்பட்ட 904-வது தேசிய லொத்தர் முடிவுகள் வருமாறு;

முதலாம் பரிசு
**06 R 0803**
ரூ. 100,000

இரண்டாம் பரிசு
**17 G 0226**
ரூ. 40,000

மூன்றும் பரிசு
**02 Z 0021**
ரூ. 10,000

தலா ரூ. 635/64 கொண்ட 100 ஆறுதல் பரிசுகள்.

02 A 0243 05 A 0322
10 A 0744 14 A 0839
15 A 0627 18 A 0193
19 A 0740 20 A 0160
23 A 0861

03 C 0677 05 C 0534
11 C 0701 14 C 0843
16 C 0723 24 C 0161
03 D 0783 06 D 0820
15 D 0660

07 E 0420 17 E 0139
19 E 0160

01 F 0969 05 F 0614
05 F 0801

06 G 0578 08 G 0084
10 G 0707

07 H 0382 16 H 0831
17 H 0469

03 J 0364 05 J 0685
22 J 0610

08 K 0461 08 K 0708
12 K 0561 16 K 0399
22 K 0858 23 K 0537
13 L 0997 23 L 0369
11 M 0535 17 M 0366

25 M 0520 25 M 0646
01 N 0482 15 N 0698
16 N 0503 16 N 0937
21 N 0370 24 N 0928
07 O 0028 17 O 0747
22 O 0839

05 P 0711 06 P 0545
11 P 0352 14 P 0853
15 P 0477 17 P 0624
24 P 0359

05 Q 0735 05 Q 0806
06 Q 0833 08 Q 0811
16 Q 0084 22 Q 0293
04 R 0807

09 S 0788 11 S 0213
12 S 0620 14 S 0027
15 S 0993 17 S 0290
13 T 0489 14 T 0804
19 T 0312 22 T 0606
07 U 0740 12 U 0242
13 U 0464 16 U 0319
17 U 0248

04 V 0485

03 W 0179 03 W 0312
16 W 0477 21 W 0042
24 W 0057

07 X 0004 08 X 0875
09 X 0867 16 X 0298
19 X 0091

21 Y 0909 24 Y 0585
12 Z 0942 15 Z 0916
21 Z 0328 23 Z 0487

(இவையாவும் உறுதிப்படுத்தப்பட வேண்டும்)

## வானெலி ரூபவாஹினி தேர்தல்பிரசாரம்

வானெலியில் இன்று இரவு 8 45 முதல் 9.00 வரை மக்கள் விடுதலை முன்னணி தலைவர் திரு ரோகண விஜயவீரா உரை நிகழ்த்துவார்.

ரூபவாகினியில் இன்று இரவு 8 45 முதல் 9 30 வரை ஐ தே. க வேட்பாளர் ஜனுதிபதி ஜே ஆர். ஜெயவர்த்தன உரை நிகழ்த்துவார்.

நாளை 15ம் திகதி வெள்ளிக்கிழமை ரூபவாஹினியில் இரவு 8.30 முதல் 8. 45 வரை மக்கள் விடுதலை முன்னணி தலைவர் திரு. ரோகண விஜயவீரா உரை நிகழ்த்துவார்.

### 16ம் திகதி சனிக்கிழமை வானெலி (இரவு)

7 00—7.15— திரு. கொப்பேகடுவ [சு.க]
7.45—8.00— திரு. கொல்வின் ஆர். டி. சில்வா [ச.க]
8 15—9.00— திரு. ஜே. ஆர் ஜெயவர்த்தன [ஐ. தே.க]
9 30—9 45 — திரு. ஜி. ஜி பொன்னம்பலம் [அ. இ. த. கா]

### 16ம் தேதி சனிக்கிழமை ரூபவாகினி (இரவு)

6 45—7 00— திரு ஜி. ஜி. பொன்னம்பலம் [அ இ. த. க]
7.15—7.30— திரு. கொல்வின் ஆர். டி. சில்வா (ச க)
8.00— 815— திரு கொப்பக்கடுவ [சு. க]

## மன்னர் பல. நோக்குக் கூட்டுறவுச் சங்கம் வெற்றுச்சாக்குக் கேள்விப்பத்திரம்

மேற்படி சங்கத்தில் அனுபவம் வாய்ந்தசாக்குவியாபாரிகளால் தரம் பிரிக்கப்பட்ட 5862 வெற்றுச்சாக்குகள் விற்பனைக்காக முத்திரையிடப்பட்ட [சீல்] விலை மனுக்கள் கோரப்படுகின்றன. மீளளிக்கப்படாதகேள்விப்பத்திரக்கட்டணமாக ரூபா 25/-ம் மீளளிக்கப்படும் வைப்புப்பணமாக ரூபா 500/-ம் செலுத்தி 25 - 10 - 82 நண்பகல் 12 00 மணிக்கு முன்புதாக சங்கத் தலைமைக் காரியாலயத்திலுள்ள விண்ணப்பப்படிவங்களையும் கேள்விப்பத்திர நிபந்தனைகளையும் பெற்றுக்கொள்ளலாம். இப்படிவங்களில் எழுதி அனுப்பப்படும் விலை மனுக்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். மேலதிக விபரங்களுக்கு பொதுமுகாமையாளருடன்தொடர்பு கொள்ளவும்.

பொது முகாமையாளர் 4822


# வெளிநாட்டில் வேலை வாய்ப்பு

பின்வரும் 100 பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

(உடனடியாகத் தேவை)

(1) லிபியாவில் உள்ள ஜேர்மன் நிறுவனம்:

- ✶ எஞ்ஜினியர்ஸ்
- ✶ பிளம்பர்ஸ்
- ✶ தச்சுத் தொழிலாளர்
- ✶ அளவையாளர்கள் (Quantity Surveyors)
- ✶ சாரதிகள் (Heavy Vehicles)
- ✶ வெல்டேர்ஸ்
- ✶ மேசன்
- ✶ இயந்திரவியலாளர்
- ✶ படவரைஞர்கள் (Draftsmen)
- ✶ மெக்கானிக்ஸ் (Mechanics–Heavy)
- ✶ வேலையாட்கள்

(2). மத்திய கிழக்கு :

- ✶ வேலையாட்கள்
- ✶ பணிப் பெண்கள் / ஆண்கள்
- ✶ ஹோட்டல் கீப்பர்ஸ், உதவியாளர்கள்

பாஸ்போட் போட்டோஸ்ரட் பிரதி, போட்டோ, அனுபவ சான்றிதழ், நற்சான்றிதழ் ஆகியவற்றில் ஒவ்வொன்றிலும் இரு பிரதிகளுடனும் 150/- ரூபா வுடனும் நேரில் வரவும்

என். பாஸ்கரன் J. P.,
(பிரதேசசபைத் தலைவர் கரவெட்டி)

INDRANEE AGENCY
நெல்லியடி, கரவெட்டி.

Labour Licence No 276 போன்: 898-கரவெட்டி (4813)

# போலந்தில் லெனின் கப்பல்கட்டுந்தளம் இராணுவக் கட்டுப்பாட்டில்!

## "சொலிடாறிற்றி தொழிற்சங்கத்தை அழிக்க முடியாது" -பாப்பரசர்

வார்ஸோ அக் 13

சொலிடாறிற்றி தொழிற்சங்கம் தடைசெய்யப்பட்டதையடுத்து கடந்த இரண்டு தினங்களாக போலந்தின் முக்கிய நகரங்களில் பொலிஸாருக்கும் தொழிலாளர்களுக்குமிடையே பலத்த மோதலகள் இடம்பெற்று வருகின்றன. மேலும் விரிவடையாமலிருக்கும் கையில் லெனின் கப்பல் கட்டும் தளம் பூரண இராணுவ கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கையையடுத்து இத்தளத்தில் குழப்பங்களில் ஈடுபடுவோர் இராணுவ ரீதியிலான விசாரணைகளுக்குட்படுத்தப்படுவர் என அறிவிக்கப்பட்டது.

கடந்த இரண்டு தினங்களாகவே தொழிலாளர்களுக்கும், பாதுகாப்புப் படையினருக்கும் இடையிலான மோதல்கள் பெருகிவருகின்றன. போல்டிக் துறைமுகத்திலும் நேற்றிரவு கைகலப்புகள் இடம்பெற்றன.

இதுவரை நடைபெற்ற கைகலப்புகளின் போது 148 பேர் கைது செய்யப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளரென்று தெரிவிக்கப்பட்டது. கலகக்காரரை அடக்குவதற்கு கண்ணீர்ப் புகைப்பிரயோகங்களையும், அதிவேக தண்ணீர்ப் பிரயோகங்களையும் தடியடிகளையுமே பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனரென்று தெரிவிக்கப்பட்டது.

போலந்தில் நிலவிவரும் பதட்டநிலை குறித்து பாப்பரசர் தெரிவித்துள்ள கருத்தில் "நன்கு காத்திரமாக வளர்ந்திருக்கும் சொலிடாறிற்றி தொழிற்சங்கத்தை இலகுவில் ஒழித்துவிடமுடியாது" என்று குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை தடுப்புக்காவலில் இருந்துவரும் சொலிடாறிற்றி தொழிற்சங்கத்தின் தலைவரான திரு லெக் வாலேசாவுக்கு இந்த ஆண்டுக்கான 'நோபல் சமாதான பரிசு' வழங்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாக அறியப்படுகின்றது. (கி)

## பயங்கர வாதிகள் 600 பேர் கைது!

இஸ்லாமாபாத், அக் 13

பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டதாக அறுநூறு பேர் பாகிஸ்தானில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பாகிஸ்தான் மாநிலங்களில் பயங்கரவாத நடவடிக்கைகளைத் தடைசெய்யும் பொருட்டு பாதுகாப்புநிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன. இந்நிலையங்கள் பயங்கரவாத நடவடிக்கைகள் குறித்த தகவல்களை சேகரிப்பதுடன் சந்தேக நபர்களை கைதுசெய்யுமென்றும் தெரிவிக்கப்பட்டது. [கி]

## 'வளர்முக நாடுகளை அமெரிக்கா சுரண்டுகிறது!' -- பிரஷ்னேவ்

மாஸ்கோ அக் 13

அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகள் உட்பட ஆபிரிக்கக் கண்டத்திலுள்ள சில நாடுகளையும் அமெரிக்கா சுரண்டி வருகின்றது" என்று சோவியத் அதிபர் திரு. பிரஷ்னேவ் மாஸ்கோவில் நேற்றிரவு நடைபெற்ற விருந்துபசாரமொன்றில் குறிப்பிட்டார்,

அதிபர் பிரஷ்னேவ் தொடர்ந்து தமது உரையில் சமயூனிய நாடுகளுடன் அமெரிக்கா நட்புப்பாராட்டுவதில்லையென்றும் அதிபர் றெனல்ட் றீகன் கம்யூனிசத்துக்கெதிரான இயக்கமொன்றை ஆரம்பித்துள்ளாரென்றும் தெரிவித்தார்.

## லால் குடிக்கு கௌரவம்

சென்னை, அக். 13

தமிழ்நாட்டைச் சேர்ந்த வயலின்மேதையான திரு. லால்குடி ஜெயராமனுக்கு பெங்களூர் கர்நாடக இசைமன்றம் சிறப்பு விருதொன்றை வழங்கிக் கௌரவித்துள்ளது.

இதனுடன் ஐயாயிரம் ரூபா ரொக்கப்பரிசும் சான்றிதழ் ஒன்றும் இம் மன்றத்தினரால் இவருக்கு வழங்கப்பட்டுள்ளன.

இவ் இசைமன்றம் திரு. லால்குடியைப் பாராட்டியுள்ள இதேவேளை, கலாநிதி பாலமுரளி கிருஷ்ணா, திரு.தேவேந்திரபிரசாத் போன்ற பிரபல பாடகர்களின் பெயர்களிலும் புலமைப்பரிசில்களை; வழங்க முன்வந்துள்ளது. (கி)

## தொழிற்சங்க பிரதிநிதிகளுக்கு விசா மறுப்பு

மாஸ்கோ அக். 13

அமெரிக்காவில் ஸ்தாபன ரீதியாக அமைந்த தொழிற்சங்கங்களது அழைப்பின்பேரில் அமெரிக்காவுக்குச் செல்ல விரும்டம் சோவியத் தொழிற்சங்கப் பிரதிநிகளின் குழுக்களுக்கு, அமெரிக்க அதிகாரிகள் "விசா" அனுமதிச்சீட்டுக்கள் வழங்க மறுத்துவிட்டதாக சோவியத் தொழிற் சங்கங்களின் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கட்டிடம் மற்றும் கட்டிடப் பொருள் உற்பத்தித் தொழிலாளர் சங்க மத்திய கமிட்டிக்கு, தூதுக்குழு ஒன்றை அனுப்புமாறு, சான்பிரான்சிஸ்கோ கட்டிடத் தொழிலாளர் சம்கம், ஓர் அழைப்பு அனுப்பியது. அந்தத் தூதுக்குழுவினர் 'அமெரிக்காவுக்கு விஜயம் செய்வதற்குத்தேவையான 'விசா' வழங்க அமெரிக்க அதிகாரிகள் மறுத்துவிட்டனர். அதேபோல், அதற்கு முன்னர் 'இன்றைய தொழிலாளர்' என்ற அமெரிக்கப்பத்திரிகையின் 20ம் ஆண்டு விழாவுக்கு அழைக்கப்பட்டிருந்த சோவியத் தொழிலாளர் பத்திரிகை துணைப் பிரதம ஆசிரியர் ஆர். சோல்ச்சனேவுக்கும் அமெரிக்க அதிகாரிகள் 'விசா' கொடுக்க மறுத்துவிட்டனர். சென்ற ஆண்டிலும் இது போன்ற பாரபட்சம் காட்டப்பட்டது.

அமெரிக்க அரசின் போக்கு, அமெரிக்க ஜனாதிபதி கையொப்பமிட்டுள்ள ஹெல்சிங்கி ஒப்பந்தத்திற்கு முரணானதாகும் என்று. சோவியத் தொழிற்சங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## 16ம் நூற்றுண்டின் கப்பல் மேலெடுக்கப்பட்டது! 45 லட்சம் பவுண் செலவு!

லண்டன் அக் 13

16ம் நூற்றுண்டில் பிரெஞ்சுக் கடற்படையுடன் நடைபெற்ற யுத்தமொன்றில் மூழ்கடிக்கப்பட்ட 'மேரி றோஸ்' என்ற பிரிட்டனின் கடற்படைக் கப்பலொன்று நானூறு வருடகால இடைவெளிக்குப்பின்னர் கடந்த வாரம் கடலினுள் இருந்து மேலே கொண்டுவரப்பட்டது.

இந்தக் கப்பல் 16ம் நூற்றுண்டில் பிரிட்டனை ஆண்ட ஹென்றி மன்னரின் கடற்படைக்குச் சொந்தமானதாகும். மரத்தினுலான இக்கப்பலை மேலே கொண்டு வர பிரிட்டன் 45 லட்சம் ஸ்டேர்லிங் பவுண்கள் செலவிட்டது. இந்நிதி இக் கப்பலை மேலே கொண்டுவரும் திட்டத்திற்கென ஆரம்பிக்கப்பட்ட நன்கொடைத் திட்டத்திலிருந்து சேகரிக்கப்பட்டது.

வேல்ஸ் இளவரசரும், பிரிட்டனின் முடிக்குரியவருமான சார்ள்ஸ் இளவரசரின் மேற்பார்வையில் 'மேரி றேய்' கப்பலை மேலே கொண்டு வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. பொறியியலாளர்களும் கடற்படைச் சுழியோடிகளும் இந்த நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டதுடன் சார்ள்ஸ் இளவரசரும், அவ்வப்போது சுழியோடியாகவும், பொறியியலாளராகவும், செயலாற்றி இம் முயற்சியில் நேரடியாக இயங்கினுர்.

'மேரி றேஸ்' கப்பல் மேலே கொண்டு வரப்பட்ட போது அருகிலிருந்த கடற்படைக்கப்பல்கள் 'சைரன்' ஒலி எழுப்பின. இத்துடன் பீரங்கிகளிலிருந்தும் மரியாதை வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன. (கி)

## ☆ போக்லண்ட் யுத்தத் தளபதிகளுக்கு பெரும் விருந்துபசாரம்!

லண்டன், அக். 13

போக்லண்ட் யுத்தத்தில் பணிபுரிந்த பிரிட்டனின் முப்படைத் தளபதிகளுக்கும், உயர் அதிகாரிகளுக்கும் பிரிட்டிஷ் பிரதமர் திருமதி மாக்கிரெட் தட்சர் விருந்துபசாரமொன்றை வழங்கினுர்.

உபசாரத்துக்கு வந்திருந்த தளபதிகள், உயரதிகாரிகளை பிரதமர் திருமதி மாக்கிரெட் தட்சரும், அவரது கணவர் திரு. தட்சரும் தமது இல்லத்தின் வாசலில் நின்று கைகுலுக்கி வரவேற்றனர்.

பிரதமர் திருமதி மார்கிரெட் தட்சர் மட்டுமே இந்த விருந்துபசாரத்தில் பங்குபற்றிய ஒரேயொரு பெண்மணியாவார். விருந்தாளிகளின் மனைவிமார் எவரும் அழைக்கப்படவில்லை.

போக்லாந்தில் நங்கூரமிட்டிருந்த பிரிட்டிஷ் போர்க் கப்பல்களின் பிரதம தளபதியாகவிருந்த ரியல் அட்மிரல் ஜோன்வூட்வார்ட், தரைப் படைப் பொறுப்பதிகாரியாகவும் போர்ட் ஸ்ரான்லியில் ஆர்ஜன்டீன படைகள் சரணடைய மூலகாரணமாக இருந்தவருமான மேஜர் ஜெனரல் ஜெரொமி மேற் ஆகியோரும் இந்த விருந்தில் கலந்துகொண்டனர். [கி]

## "பாடசாலைவளர்ச்சி ஒத்துழைப்பிலேயே எதிர்காலம் தங்கியுள்ளது"

(யாழ்ப்பாணம்)

"இங்கு பெற்ருர் பெருமளவில் பங்குபற்றியதைக் காண பெருமகிழ்ச்சியடைகின்றேன். பெற்ருர் ஆசிரியருடன் ஒத்துழைப்பதிலேயே வித்தியாலயத்தின் எதிர்காலம் தங்கியுள்ளது, இவ்வித்தியாலயத்தைக் கட்டி உபகரித்த ஸ்தாபகரின் வாரிசுகள் தொடர்ந்தும் வித்தியாலய வளர்ச்சியில் ஈடுபடுவதைப் பெரிதும்பாராட்டுகின்றேன்"

உடுப்பிட்டி வட்டாரக் கல்வி அதிகாரி திரு வ.க. ஈசுரபாதம் தொண்டமானுறு வீரகத்திப்பிள்ளை மகாவித்தியால அபிவிருத்திச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் பிரதம விருந்தினராகப் பங்குபற்றிப் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினுர்.

வித்தியாலய அதிபர் திரு கே. ஜெயராசா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் பின்வருவோர் ஆளுகைக் குழு உறுப்பினர்களாக ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. கே. ஜெயராஜா (அதிபர்) செயலாளர் திரு மு. தருமரத்தினம் பொருளாளர்: திரு. கே. குணசிங்கம் உறுப்பினர்கள்; திருவாளர்கள் எஸ். பொன்னுச்சாமி, பீ. வெள்ளையன், வ். தெய்வேந்திரம், ப. சண்

(7-ம் பக்கம் பார்க்க)

## பொன்னுடை போர்த்தி கௌரவித்தனர்

(யாழ்ப்பாணம்)

வண்ணை வடக்கு சிப்பித்தறை அருள்மிகு ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி ஆலய மண்டலாபிஷேகத்தில் 48 நாட்கள் தொடர்ந்து சம்பூரணராமாயணம், மகாபாரதம் குறித்து தொடர் விரிவுரை நிகழ்த்தி வந்தநீராவியடிபிரம்மஸ்ரீ சிவ. வை. நித்தியானந்த சர்மாவுக்கு ஆலயபரிபாலன சபையின் சார்பிலும், ஊர்மக்களின் சார்பிலும் பரிபாலன சபைத் தலைவர் திரு. குமாரவேலு அவர்கள் பொன்னுடை போர்த்தி கௌரவித்தார்.

## "இஸ்ரேலை பிரிட்டன் கண்டிக்கிறது; பி.எல்.ஓ. பலாத்காரத்தை கைவிடவேண்டும்" -- பிரிட்டன் வெளிநாட்டமைச்சர்

கெய்ரோ அக் 13

"மேற்காசியாவில் இஸ்ரேலின் கடும்போக்குக்கெதிராக இங்கிலாந்து அதன் ஐரோப்பிய நேசநாடுகளுடன் சேர்ந்து உழைக்கும் அதேவேளை பாலஸ்தீன இயக்கத்தவரும் தமது பலாத்காரமுயற்சிகளை கைவிட வேண்டும்" என்று பிரிட்டன் வெளிநாட்டமைச்சர் திரு. பிரான்ஸிஸ் பீம் தமது எகிப்து விஜயத்தைமுடித்துக்கொண்டு கெய்ரோவிலிருந்தும் புறப்படுவதற்கு முன்னர் தெரிவித்தார்.

பாலஸ்தீன தலைவர் அரபாத்துக்கும் ஜோர்தான் மன்னர் ஹுசைனுக்குமிடையே நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் நல்ல விளைவுகளை ஏற்படுத்துமென்று தாம் எதிர்பார்ப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

திரு. பிரான்ஸிஸ்பிம் கடந்த வாரம் மத்திய கிழக்கு நாடுகளுக்கான விஜயத்தினை மேற்கொண்டுசிரியா எகிப்து ஆகிய நாடுகளுக்கும் விஜயஞ்செய்திருந்தார். சிரிய அதிபர் ஹபீஸ் அஸாத் இஸ்ரேலுக்கு அமெரிக்கா ஆயுத வினியோகத்தை மேற்கொள்வதை இங்கிலாந்து கண்டிக்கவேண்டுமென்று இவரிடம் கேட்டுக்கொண்டார்

இதேவேளை பெய்ரூட்டின் கிழக்குப் பகுதியில் இஸ்ரேலியத் துருப்புக்களுக்கும், சிரியத் துருப்புக்களுக்குமிடையே மோதல் ஒன்று நேற்று இடம்பெற்றது. இழப்புகள் குறித்து விபரங்கள் வெளிவரவில்லை.

போர் நிறுத்தத்தை மீறி இம்மோதல் ஏற்பட்டதற்கு சிரியாவும், இஸ்ரேலும் பரஸ்பரம் ஒருவரையொருவர் குற்றஞ்சாட்டியுள்ளனர். (கி)

## மணிவாக்கு

மனம் வெகுதூரம் செல்கிறது—தனிமையில் திரிகிறது. உடம்புதான் அதன் ஒய்வுகூடம் மனதைக் கட்டுப்படுத்துகிறவன் பந்தங்களிலிருந்து விடுபடுகின்றான்.

— தர்மபதம்

# நமது நோக்கு

## வாக்குரிமை வியாக்கியானம்

ஜனாதிபதி தேர்தலின் முக்கியத்துவம் பற்றியும் மக்கள் வாக்குரிமையின் மகத்துவம் பற்றியும் அவசியமற்ற அலட்டல் பத்திரிகைகளில் இடம்பெறுகின்றது.

கருத்து விமர்சிக்கும் இப்பத்திரிகைகள் பல ஏதோ ஒரு கட்சிக்கு கொடி பிடிப்பது வாசகர்கள் கண்டுபிடிக்கக் கூடாத விடயமல்ல

நாட்டுக்கொரு ஜனாதிபதி என்ற கண்டுபிடிப்பு விமர்சிக்கப்படுறது. எனவே மக்கள் தப்பொறுப்பை எவ்விதத்திலும் இழந்து விட இயலாது என்ற பாடம் படிக்கப்படுகிறது. இந்த அம்பு தமிழ் மக்களுக்கு விடுத்த அம்பு.

தமிழ் மக்கள் தேர்தலைப் பகிஷ்கரிக்கவேண்டுமென்ற கட்டளைக்கு இது மறுத்தானாக விருக்கின்றது.

மக்கள் முரண்பட்ட கட்டளைகளால் மயக்கமடைந்து விடுவார்களென்று கவலைப்படுவது அவசியமற்றது. வாக்குரிமையின் பெருமை மக்கள் அனுபவத்தில் அறிந்த விடயம்.

இவ்வளவு காலம் உபயோகித்த உரிமை இன்று தமிழ் மக்களைத் தங்கள் சொந்த இடத்திலேயே அபாயநிலைக்கு கொண்டு வந்திருக்கிறது.''

இவ்வாறு சிந்திப்பவரின் நிலையென்ன? தனிநாடு கண்டுவிட்டால் பிரச்னை முடிந்து விடுமென்று கொண்டாலும் அது கண்ணுக்கு எட்டக்கூடிய நிலையில் இருக்கிறதா?

இல்லையென்று கைவிரிக்க வேண்டிய நிலையிலும் நாம் பஞ்சங்கொட்டிக் கொண்டு வாளாவிருக்கவேண்டியதில்லை.

தனிமனிதனோ; மனித கூட்டமோ ஒற்றுமைப்பட்டு ஒரே வழியில் சிந்திக்கும் சுபாவம் சமூக வாழ்வில் என்றும் தொடரும். சோஷலிச நாடுகளிலேயே மக்கள் சிந்தனை சமுதாயத்தை உருவாக்கின்றது உருவாக்கப்பட்ட சமுதாயத்தை கருத்து வேறுபாடுகள் குலைத்து விட அங்கு சுதந்திரம் கிடைக்காதென்பதே அந்த நாடுகளுக்கும் எமது நாட்டுக்குமுள்ள பெரிய வேறுபாடு.

எனவே வருகிற கிழமை நடைபெறும் ஜனாதிபதி தேர்தல் நாட்டின் வருங்கால விதியை நிர்ணயிக்கப் போகின்றது. சிறுதுளி பெருவெள்ளம் என்ற பழமொழிக்கமைய தமிழ்மக்கள் வாக்குகள் தேர்தல் முடிவுக்கு முக்கியமானவை, முடிவில் மாற்றம்ஏற்படுத்த வல்லவை.

நாமெந்த அட்சியையோ ஆட்சி மாற்றத்தையோ எமது கவனத்துக்கெடுப்பதில்லையென்று ''சும்மா கைகட்டிக் கொண்டிருப்போமா? அந்த ஒருமைப்பட்ட கருத்து தமிழ் மக்களின் உள்ளத்தில் உணர்ச்சி ததும்புமளவில் பகிஷ்கரிப்பை தூண்டுகிறதா?

இன்னொரு வாரத்தில் என்ன நடக்கப் போகிறதென்று கணிக்க முடியாதவர் அவ்வாறு கருதலாம்.

வேட்பாளர்கள் கூட்டம் ஒவ்வொன்றிலும் பிரசாரப் பேச்சுக்களிலும் தமிழ்மக்கள் பெரும் ஆர்வங்காட்டுகின்றனர். வாக்களிக்கமுயல்பவரை தடுத்து நிறுத்தத் துணிபவர் யார்? அது குற்றச்செயலென்பது அறிந்ததே

இன்னொரு வகையில் தமிழ்ப்பகுதிகளில் பெரும்பாலோர் வீட்டிலிருந்துவிட முடிவு செய்தால் அந்த வாக்குகள் மிகச் சுலபமாக காலைப் பொழுதிலேயே அளிக்கப்பட்டுவிடும். இதனை அறியாதார் யார்?

இந்த ஆரவாரமான வேளையில் எந்தவேட்பாளர் வெற்றிபெற்றால் ஒரு நல்ல திருப்பம் ஏற்படுமென்று முடிவு கட்டப்பட்டு வருகிறது. தமிழர் விடுதலைக்கூட்டணி எடுத்த முடிவே விளக்மற்று பல வழிகளில் மக்களைச் சிந்திக்கவைத்துள்ளது.

''பகிஷ்கரிக்க வேண்டுமானால் அப்படிச் செய்யுங்கள்: ஆனால் வாக்களிக்க முடிவுசெய்தால் என்னையே ஆதரியுங்கள்'' என்றார் இன்றைய ஜனாதிபதி தம்முடைய யாழ்ப்பாணப் பேச்சில். பகிஷ்கரிப்புக்கு இடமளித்ததால் அவருக்கு அது நயமாயிருக்கும் போல்!

எவ்வகையில் பார்த்தாலும் தேர்தற் காய்ச்சல் மிக உரமாக ஏறிவருகிறது. இது நாடளாவிய தேர்தல் என்ற வகையில், தங்கள் விருப்புக்கு உகந்த கட்சி வேட்பாளர் எவருக்கு வெற்றி கிட்டுமோ அவரை நாடுவது குறைந்த தொகை மக்களின் இயல்பான வழக்கம்.

ஆளுங்கட்சியை ஆதரிப்பவர் எத்தகையவர்?என்று ஆராய்வது இன்னொருவழக்கம். அந்தக் கட்சிக்கா எதிர்க்கட்சிக்கா ஆதரவு நாடளவில், நாளளவில் கூடிவருகிறது? இவ்விதவிசாரணை தேர்தலுக்கு முதல் நாள் வரை பேசப்பட்டு, ஒரு தெளிவான படம் பரவலாக காட்சியளிக்கும்.

ஒரு தனிமனிதனின் இதயத்தில் நடைபெறும் நாடகம், தனிப்பட்டதல்லது; தனது சகாக்கள் தத்தம நாடகங்களைப் பகிர்ந்து ரசித்து, பல மாற்றங்களை ஏற்படுத்தி ஒரு கூட்டம் ஒரே வழியென்ற முடிவு தலைப்படும்; நினைத்திராத பெருமாற்றத்தை நாடு பூராக ஏற்படுத்தவல்லது

ஒரு புயல் காற்றடிக்க பெரும்மரங்களே பாதிப்படைகின்றன. அவற்றின் சாயலில் வளரும் சிறுகன்றுகள் பற்றைகள் காற்றுக்கு வளைந்துகொடுத்து பாதுகாப்பாக, நிலைபெயராமல் நிற்பது இயற்கையின் நியதி ஏழைமக்கள் எதற்கும்எடுபடாமல்ஒன்றுபட்ட திடமான நிலையை இது குறிக்கின்றது.

ஜனாதிபதி தேர்தல் ஒரு மாபெரும் புயல்காற்று. மக்கள் தங்கள் மனதில் குடிகொண்டுவரும் எண்ணங்கள். நிலைத்த கட்டத்தில், எவரும் அசைக்கமுடியாத ஸ்திரம் பெற்றுவிடும்.

கட்சிகளின் அர்த்தமற்ற கட்டளைகளோ, முடிவுகளோ மக்கள் கூட்டத்தினரை தமதுநிலைத்தகருத்திலிருந்து மாற்றுவது கடினம்; அவ்வளவு தூரம்எந்த ஒரு கட்சியும் புரட்சி செய்யும் பொறுப்பு ஜனநாயக தேர்தல் முறையில் செயற்படமாட்டாது

யாருக்கு வெற்றிகிட்டுமென்பதில் பத்திரிகைகள் கொடிகட்டுவதை விளங்க முடியாதவர் யார்? ஏழை மக்களின் கற்பில் ஜெனித்த முடிவை எந்தப்பத்திரிகை பிரபலம் அளிக்கமுன்வரும்?

ஆரம்பத்தில் எதிர்பாராத முடிவு பத்திரிகைகளின் அளவு கடந்த பிரசாரத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கமுடியும்.

# 'ஐயாறன்' என்ற எம் ஆன்மிக 'அப்பா'

'ஈழநாடு' ஆசிரியர் திரு. கே. பி. ஹரன் அவர்கள் மறைந்து இன்று ஓராண்டு பூர்த்தியாகின்றது. அவர் நினைவாக இக்கட்டுரை இடம்பெறுகின்றது]



நான் ஒரு ''ஈழநாடு'' அபிமானி, விசிறி. அப்பத்திரிகையில் ஒழுங்காக வெளிவந்துகொண்டிருந்த ''ஐயாறன்'' பகுதி எங்களைக் கவர்ந்தது. அப்பகுதியின் இறுதியில் வரும் திருப்பாடல்களில் பலவற்றை நாம் மனப்பாடம் செய்வோம். அவ்விதம் அறிமுகமான பெரியாருக்கு ஒரு கடிதம் எழுத எண்ணினேன். அன்றும் சரி இன்றும சரி எனக்கு எழுத வராது. மனதில் பட்டதை எழுத்தில் வடிப்பேன் அவ்வளவுதான் அப்படியே அன்றும் செய்தேன்.

என்ன ஆச்சரியம் மறுநாளே பதில் வந்தது சைவத்திலும் தமிழிலும் தோய்ந்த கரத்தால் ஒரு முடங்கல். குதிரை மேல் ஏறிய புளுகம்! என்ன வெல்லாம் எழுதி இருந்தார்கள்!

அன்பேசிவம், தங்கள் கடிதத்தில் சிவத்தையே தரிசித்தேன் திருநீறைறத்தவிர வேறு மருந்து முண்டோ என் சுகயீனத்துக்கு வீட்டுக்காரர்கள் தொல்லையால் மருந்தும் உட்கொள்ளுகிறேன், பத்தியமும் காக்கிறேன் அதனால் பரவாயில்லை. உங்களைப்பற்றி நிறைய எழுதுங்கள் என்றெல்லாம் எழுதியிருந்தார். பிள்ளைகளே என்று அழைத்து நீங்கள் உங்கள் அடபாவை பூக்கவில்லை. நாம் எப்புதல்வரை இழக்கவுமில்லை என்று குறிப்பிட்டு உங்கள் அன்புள்ள அப்பா என்றே ஒப்பமும் இட்டிருந்தார்.

கனவா, நினைவா என்றிருந்தது. சரும்பாயினித்தது. அப்பாபுதல்வியர் உறவு நீடித்தது ஆங்கிலத்தில் முகவரி எழுதினாலும் 'மிஸ்' என்று குறிப்பிடமாட்டார். செல்வியர் என்றே எழுதுவார். உள்ளே 'நீர்' என்று கூடக் குறிப்பிடமாட்டார். நீங்கள் என்றே வரைவார். கடிதத்தின் எப்பக்கத்திலும் பிள்ளையார் சுழியும் சிவமயமும் தவறாது அகங்காரம் நீங்கியவராதலால் ''நான்'' என்றும் எழுதமாட்டார். தன்னைப் பற்றிக்குறிப்பிடும்போது ''அப்பா' என்றோ ''இவன்'' என்றோ தான் குறிப்பிடுவார்கள் எங்கள் கடிதங்கள் சில சமயம் மிக நீளமாயிருக்கும். வரிக்கு வரி ஊன்றிப்படித்த பின்னரே பதில்வரும். எங்கள் தவறுகளை எப்போதாவது ஒப்புக்கொண்டு எழுதுவோம். ''பின்னை என் பிழையைப் பொறுட்பானைப் பிழையெல்லாம் தவிரப் பணிப்பானை'' என்று தேறுதல் பதில்வரும்.

(5ம் பக்கம் பார்க்க)

### தேவார திருவாசகங்கள்

# வேதங்கள் பெறும் நிலையை பெறவேண்டும்

பேராசிரியர் கே. கைலாசநாதக் குருக்கள்

(நேற்றைய தொடர்ச்சி)

மேலும், மரணக்கிரியை பற்றி நாவலர் அவர்கள் கூறியுள்ள கருத்துக்களும் இச்சந்தர்ப்பத்தில் நன்கு சிந்திக்கப்பாலவை:-

சைவ வினாவிடை இரண்டாம் புத்தகத்தின் 90 ம் வினாவிற்குரிய விடைதரும் கருத்துக்கள் முக்கியமானவை. சிவதீட்சை பெற்றவர்க்கே ஆகமக் கிரியைகள் உரியவை. பெறுதவர்க்கு நமோந்தமான தேவதோத்திரங்களைகொண்டு கிரியைகள் செய்யத்தக்கவை என்றமுறை இங்கு கூறப்பட்டிருக்கக் காண்கிறோம். மதுமாம்சாதிகளை விலக்காததனாலும், தீட்சை பெறுததனாலும் தமிழ்வேதம் ஓதும் தகுதி அறவே அற்றவர்களின் பிரேதங்களின் முன்னிலையில் தேவாரங்களைப் படிப்பதும் தீட்சை பெற்றவர்க்குரிய செழுமையானகிரியைகள் செய்வதும் எப்படி முறையாகும்?!

சமய விசேஷ தீட்சைகளின் பின் சிவசம்யோஜனம் என்ற அம்சத்தை உள்ளடக்கியதால் சிவதீட்சை எனப்படும் நிர்வாண தீட்சை பெற்றவர்க்கே ஆகமவழிகூறும் அகோர சிவாசார்யபத்ததியில்வரும் அந்தியேஷ்டிக் கிரியை உரியது. பேரிதாடனம், சுண்ணமிடித்தல் ஆகியவற்றை உள்ளடக்கிய மரணக்கிரியைகள் இவருக்கே உரியது. சிவயோகிகள் எனப்படும் இவர்கள் பிரேதங்கள் பிரேதங்களாகா. இங்கு தேவார, திருவாசகங்கள் ஓதுவதில் தவறில்லை. இம்முறையினையே சைவவினாவிடை இரண்டாம் புத்தகம் 90ம் வினாவின் விடை குறிப்பிட்டுள்ளது. மதமாம்சாதிகளைப் புசிப்பவர்கும் தீட்சை பெறுதவர்க்கும் வெறும் நமோந்தமாகிய தேவதோத்திரங்களைக் கொண்டு கிரியைகள் நிகழ்தற்குரியன. தீட்சையைப் பெறுதுமட்டுமன்றி மதுபானமும் மாமிசபோசனமும் உடையவர்க்கோவெனின், அவர்க்கு உயிருடன் இருக்கும்பொழுதே தமிழ்வேதம் ஓதும் அதிகாரம் அறவே இல்லையே?

இறந்தவர்களை இறந்தபின் சவநிலையில் உயிர்ப்பிக்கும் நோக்குடன் தேவாரம் பாடி அற்புதம் நிகழ்த்திய அருளாளர்கள் தேவாரம் பாடியது சவநிலையில் நிரந்தரமாக இருந்துசுடலைக்குஎடுத்துச்செல்லப்பட்டு தகிக்கப்பட இருக்கும் பிரேதங்கள் முன்னிலையிலன்று. இறந்த வீட்டிலேயே இவர்க்கு உயிரளிக்கும் தெய்வீக ஆற்றல் இருந்தால் நாங்களும் அவ்வாறு பாடலாம். அருளாளர்களாகிய அம்மகான்கள்போன்று அற்பர்களாகிய நாங்களும் செய்ய நினைப்பது எவ்வளவுஏளனத்துக்குரியது அவர்கள்போன்டி பாடி எலும்பைப் பெண்ணாக்கும் ஆற்றலையோ அரவந்தீண்டியவனைப்பாடி உயிர்ப்பிக்க வேண்டியஆற்றலைஎங்களுடன் இணைத்துச் சிந்திப்பதே கேலிக்கூத்தாகும் பிரேதத்திற்குமுன் அவர்கள்பாடினார்களே நாமும் பாடினால் என்னஎன்பதுகுதர்க்கமே ஒழிய வேறொன்றுமில்லை அவ்வருளாளர்களின் காலதூசும் பெறுதநாம் அவர்கள்போல் (இறந்த) பிரேதத்தை உயிர்ப்பிக்கவா? அவ்வாறு செய்யும்பேறு இருந்தால பாடலாமே. தயக்கம் தேவையில்லை.

வேதங்கள் தூய்மையானவை. தூய்மையான சூழ்நிலையிலேயே அவற்றை ஓதும் மரபு தொன்றுதொட்டு நிலவிவருகிறது தேவாரதிருவாசகங்கள் தமிழ் வேதங்களெனப் போற்றப்படுவன. வேதாசாரமாக விளங்கும் அவையும்வேதத்திற்குரிய சிறப்பை பெறுவதற்குரியன. இறைவனைப்பற்றியே பாடும் தேவார திருவாசகங்களை திருக்கோயில்களிலும் கோயில்களுக்கு ஒரளவிற்கு நிகரான எம் இல்லங்களில் இதற்கென ஒதுக்கப்பட்டபுனிதமான சுவாமி அறைகளிலும் இதேபோன்ற தூய்மையான சூழல்களிலும்ஓதுவதே முறை மரண வீடுகள், மரண ஊர்வலம் போன்ற பரிசுத்தமற்ற இடங்கள் தமிழ் வேதமாகிய தேவார திருவாசகங்களை ஓதுவதற்கு இம்மியளவேனும் தகுதியற்றவை என்பது தெளிவாகின்றது.

இலௌகீக விஷயங்கள் பலவற்றைக் கூறி சமய அடிப்படையில் சைவ வாழ்வு வாழும் வழியை சைவவினாவிடை இரு புத்தகங்கள் மூலமும், பாலபாடங்கள் மூலமும், சொற்பொழிவுகள் மூலமும் காட்டிய நாவலரவர்கள் அசுத்தமான பிரேதம் இருக்கும் இடத்தில் தேவார திருவாசகங்கள் ஓதுவதற்குரியவை என்பதை எங்கேனும் வெளிப்படையாககூறியுள்ளாரா?கூறவிடத்தும்குறிப்பாகவாவது எங்காவது உணர்த்தியுள்ளாரா? என்பதை ஊன்றிச் சிந்தித்தல் வேண்டும் புராதன மரபுபேணி அதை நிலைநாட்டுவதற்காகவே அவதரித்த அவரிடமிருந்து இத்தகைய கருத்தை எதிர்பார்ப்பது தவறு.

வேதங்கள் தேவார திருவாசகங்கள் தெய்வீகமானவை. அவை பரிசுத்தமான இடங்

[5ம் பக்கம் பார்க்க]

# “பகிஷ்கரிப்பு ஐ.தே. கவுக்கே மறைமுக ஆதரவை அளிக்கிறது”

-- விஞேதன்

(யாழ்ப்பாணம்

“ஜனுதிபதி தேர்தல் அகில இலங்கை ரீதியில் நடைபெறு வதால் தமிழினத்தைச்சேர்ந்த எவரும் அபேட்சகராக நின்று போட்டியிட்டு வெற்றியீட்ட முடியாது. தமிழ்க்காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த குமார் பொன்னம்பலம் இத் தேர்த லில் போட்டியிடுவதும், தமி ழர் விடுதலைக் கூட்டணி இத் தேர்தலைப் பகிஷ்கரிப்பதும் ஜனநாயகத்துக்கு விரோத மான சர்வாதிகாரம் மீண்டும் தலையெடுக்க வழிஅமைக்கும்” என்று றீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ்ப்பாண த் தொகுதி அமைப்பாளர் திரு குமாரசாமி விஞேதன். ஜனதிபதி தேர்தலில் சிறீ லங்கா சுதந்திரக்கட்சி அபேட் சகராகப் போட்டியிடும் திரு ஹெக்டர் கொப்பேகடுவை ஆதரித்து நடைபெற்ற பிர சாரக்கூட்டத்தில் பேசுகை யில் வலியுறுத்திஞர்.

அச்சுவேலி தபால்நிலை பத் துக்கு முன்பாக சிறீலங்கா சுதந்திரக்கட்சியின் கோப் பாய்த் தொகுதி அமைப்பாளர் திரு. ஆ. சந்தசாமி தலைமை யில் இப் பிரசாரக்கூட்டம் நடைபெற்றது அச்சுவேலி ப் பகுதி அன்று நீல-சிவப்பு நிறக் கொடிகளாலும், மேடை மிளகாய், வெங்காயம்போன்ற மரக்கறிவகைகளாலும் அலங் கரிக்கப்பட்டிருந்தன.

திரு. ஹெக்டர் கொப்பே கடுவ, திரு. விஜய குமாரண துங்க, திரு. கே. சண்முக லிங்கம் உட்பட வடபகுதி சிறீலங்கா சுதந் திரக்கட்சி அமைப்பாளர்களுக்கு அன்று காலை உணவு அச்சுவேலியில் வைத்து வழங்கப்பட்டது.

திரு. விஞேதன் மேலும் பேசுகையில், மாவட்ட அபி விருத்திசபைத் தேர்தலில் சிறீலங்கா சுதந்திரக்கட்சி போட்டியிடாததால், கிழக்கு மாகாணத்தில் சுதந்திரக்கட்சி அமைப்பாளர்கள் கூட்டணி மேடைகளில் தோன்றி ஆதர வளித்தனர்” என்ருர்.

“மூதூரில் சுதந்திரக்கட்சி அமைப்பாளர் திரு. செனிவ ரத்தின பிரசாரம் செய்ததால் தமிழர்விடுதலைக் கூட்டணி யைச் சேர்ந்த வேல்முருகு வெற்றியீட்டினுர். அதேபோல் மட்டக்களப்பில் ராஜன் செல்வநாயகம் ஆதரவளித்த தால் திரு சம்பந்தமூர்த்தியும் திருகோணமலையில் ஜனப் மஜீத் ஆதரவளித்ததால் தங்கத்துரையும் வெற்றியீட் டியதை தமிழர்விடுதலைக்கூட் டணியினர் மறந்துவிடக் கூடாது என்று குறிப்பிட்ட திரு விஞேதன், ஜனுதிபதி தேர்தலில் போட்டியிடாத தமிழர் விடுதலைக் கூட்டணத் தலைவர்கள் இத்தேர்தலைப் பகிஷ்கரிக்காது. சுதந்திரக் கட்சி வேட்பாளரை ஆதரித் துப் பிரசாரம் செய்யவேண் டும் எனக்கேட்டுக்கொண்டார் பகிஷ்கரிப்பது மறைமுகமாக ஐக்கிய தேசியக்கட்சிக்கு ஆத ரவளிப்பதாகவே நாங்கள் கரு தவேண்டியிருக்கிறதென்றும் அவர் சொன்னுர்.

## மினிபஸ் ஓடும்

“ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ஆட்சிக்கு வந்ததும் மினிபஸ் கள் ஓடுவது தடைசெய்யப்ப டுமென்று ஐக்கியதேசியக்கட்சி யினர் பொய்ப் பிரசாரம் செய் கின்றனர். ஜனுதிபதி தேர்த லில் போட்டியிடும் திரு. ஹெக்டர் கொப்பேக டுவவும் நாங்களும் ஹெலிகொப்டரில் சென்று பிரசாரம் செய்யவில்லை; மினி பஸ்களில் சென்றுதான் பிரசா ரம் செய்து வருகின்ருேம். எக் காரணம் கொண்டும் மினிபஸ் சேவை தடைசெய்ய மாட் டோம் என்றும் திரு. விஞே தன் உறுதியளித்தார்.

“தமிழ் இளைஞர்கள் வெளி நாடுகளுக்கு வேலைவாய்ப்புக் கோரி தங்கநகைகளை அடகு வைத்து, பல்லாயிரக்கணக் கான பணத்தைச் செலவு செய்து போகும் நிலை ஏற்ப டாது; மாருக எந்தவிதமான பணச்செலவுமில்லாமல் இலவ சமாகவே செல்வதற்கு ஸ்ரீலங் கா சுதந்திரக் கட்சி அரசாங் கம் வழியமைக்கக் கூடியதன் மையில் இருக்கின்றதென்றும் வெங்காயம்,-மிளகாய், உரு ளைக்கிழங்கு உற்பத்தி செய்யும் விவசாயிகள் ஸ்ரீலங்காசுதந்தி ரக்கட்சி அரசில் அடைந்த பல பலன்களை நாம் நினைவு கூரவேண்டும் என்றும் அவர் சொன்னுர்.

மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிப் பிரமுகர்கள் திரு. கே. பி இரதநாயக்கா, திரு. ரி பி இலங்கரத்தன, கட்சியின் உபதலைவர் திரு. கே. சண்முக லிங்கம், வேட்பாளர் திரு ஹெக்டர் கொப்பேகடுவ ஆகி யோரும் உரை நிகழ்த்தினர்.

திரு ஹெக்டர் கொப்பேக கடுவ நல்லூர்க்கந்த சுவாமி கோவில், ஸ்ரீநாகவிகாரை ஆகி வற்றுக்குச் சென்று வழிபட்ட துடன், தந்தை செல்வா நினை வாலயத்துக்கும் அமரர்கள் ஜி. ஜி. பொன்னம்பலம், துரை யப்பா சிலைகளுக்கும் மலர் மாலை சூட்டி அஞ்சலி செலுத் தினர். [யா

# ‘ஐயாறன்’ என்ற எம்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

எங்களுடைய அவல ஓலம் தொனித்தால் பெரியோர் மணிவாசகங்களும் திருப்பா டல்களும் அமைதி சாந்தத்தை உண்டுபண்ணும் வகையில் தொகுத்து வரைவார்கள். எப்போதாவது நாம் வேடிக் கையாக நையாண்டியாக நகைச் சுவையாக எழுதிஞல் “உங்களைப்போல் எழுத அப் பாவுக்கு வராதே, உங்களு டன் போட்டிபோட முடியாத கிழம். அப்பாவுக்கு தோல்வி தன் பொருமையாயிருக்கி றது என்று எங்களைத்தட்டிக் கொடுப்பார். மனம் நோகும் படி ஒருசொல் இராது. எப் போதாவது இடித்துரைக்க வேண்டியிருந்தால் அதை ஐயாறன் பகுதியில் தான் நாம் தேட வேண்டும்.

மார்கழி மாதம் திருவெம் பாவையின் போது அபமா பிரம முகூர்த்தத்தில் விழித்து காலைக்கடன் கழித்து விளக் கேற்றி திருவெம்பாவைபாடும் போது நாம் உச்சிமுதல் உள் ளங்கால்வரை போர்த்திக் கொண்டு குறட்டை விடுவதை எழுகிஞேமா. போச்சு! வன் னெஞ்சப் பேதையர் போல் வாளா கிடத்தியால் என்னே துயிலின் பரிசே லோ ரெம் பாவாய்” என்றுபதில்வந்தது. ஐயாறன் பகுதியில் முதற் சடி தம் எம் ஆத்மீக வாழ்வுக்கு வித்திட்டது என்ருல் இவ்வா ச சம் உரமூட்டியது. அதிகாலை யில்நித்திரைவிட்டெழும்பாத பழக்கம், மாமிசம் உண்ணல் திருப்பாடல்களை நாடாத மனம், வழிபாட்டைப்பற்றிச் சிந்தியாத உளம். வம்பு தும்பு பேசுதல். நல்ல நூல் ளைக் கண்ணெடுத்தும் பாரா இத்தீய பண்புகள் படிப்படி யாகத் தேய்ந்தன.

சிவானந்த சுவாமிகளின் பக்திச்சுவை, பக்தியின் பயன் என்பனவற்றைச் சுவைத்த நாம் இறைகளோடு இசைத்த இன்ப , இன்பத்தோடு இசைந்த வாழ்வு என்ற சுந் தரர் வாக்கை உணர்ந்துபுனித ரானது ‘ஐயாறன்’ என்ற ஆன் மீக அப்பாவின் கைவண்ணத் தால்தான்.

நீண்ட ஆயுள்பெற வேண் டும் பல்லாண்டு வாழவேண் டும் தாயகம்செல்லாதீர் தடுத் தாற்கொண்டவரே என்று நாம் வரைந்ததற்கு எங்கள் தாயகம் ஈழமே உங்களைவிட்டு எங்கேபோவது?” என்றீர்களே ஏமாற்றி ஓராண்டுகாலம் பறந்து விட்டதே! தங்கள் கரங்கள் ஓய்ந்தனவோ?

“தமிழகப் தந்த அரிதான தோர் ஒளிச்சுடர்நம் நாட்டு வானக தே நெடுங்காலமாக நல்லொளி பரப்பி அற்புதமாக பிரகாசித்து விட்டு நாமெல் லாம் நினைத்துக்கண்கலங்கும் படி தாயகம் சென்று இவ்வித மாக அடங்கிவிட்டதே அதனை நினைக் நெஞ்சம் ஓ வென்று அலறுகிறதே.

...சுவாமி ஆண்டவனே! கே. பி. ஹரன் என்ற தீபப் அழியாத தீபமாக என்றும் நம் நெஞ்சங்களில் நின்று உள் ளொளி பரப்ப நின்னருள் வேண்டும்”. என்று திரு. அ. செ. மு. அவர்கள் 18-10-81ல் எழுதியதை இன்றும் நினைவு கூருவோமாக.

செல்வி. ஆ. செல்வநாயகி

# வேதங்கள்...

(4ம் பக்கத் தொடர்ச்சி)

களில் பேணிப் போற்றுதற் குரியவை. பரிசுத்தமற்ற இடங்களில் வேதங் களுக்கோ தேவார திருவாசகங்களுக்கோ ஒதுக்க மான குறையும் ஏற்பட் போவதில்லை. எங்கள் மன நிறைவுக்காகவே தெய்வீக மான தேவார திருவாசகங் களைத் தூயநிலையில் வைத்து போற்றிப் பேணுதல் இன்றி யமையாதாகின்றது. இவர் றைப் பேணுவது எங்கள் பாரம்பரியம். சவத்தின் முன் னிலையிலோ அதி தீவிரமாக தேவார திருவாசகங்களைப் படிக்கின்றனர். சவ ஊர்வலத் திலோ அத் தீவிரம் இன்னும் அதிகரிக்கின்றது. இறைவன் திருமுன்னிலையில் தேவார திருவாசகங்களை இவ்வளவு தீவிரமாக ஓதுவதைக் காண் கிலோம். சுவாமி திருவுலா கொண்டருளும் ஊர்வலத் திலோ இதேகதிதான்.

குறிப்பிட்ட தேவாரப் பாடல்களையோ, முக்கியமாக சிவபுராணத்தையோ திருக் கோயில்களில் படிக்கும் பொழுது படிப்பவர் மனத்தி லும் கேட்பவர் மனக்கண் முன்னும், [இறப்பு வீடுகளில் கேட்டுப் பழகியதன்விளைவாக பிரேதமும். பிரேத ஊர்வலக் காட்சியுமே தவிர்க்கமுடியாத வாறு தோன்றும். வேதமந் திரங்கள் !இவ்வாறு ஓதப் படாததன்விளைவாக] கோயில் களில் படிக்கப்படும்பொழுது இந்நிலையைத் தோற்றுவிக்க மாட்டா தமிழ் வேதமாகிய தேவாரதிருவாசகங்களும் வேதங்கள் பெறும் இந்நிலையை பெறுதல்வேண்டும்.

தமிழ்வேதமாகிய தேவார திருவாசகங்களை வேதங்கள் எனப் போற்றுவோமாக.

# தனியான கூட்டுறவுச்சங்கம்

[பண்டத்தரிப்பு]

காரைநகருக்கு தனியான தொரு கடற்ருெழிலாளர்கூட் டுறவுச் சங்கம் ஒன்று விரை வில் அமைக்கப்படவுள்ளது. இதற்கான நடவடிக்கைகளை யாழ். மாவட்ட கடற்ருெழில் விரிவாக்க அதிகாரி மேற் கொண்டுள்ளார். தற்போது வட்டுக்கோட்டைதொகுதி கடற்ருெழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தின் கீழ் இயங்கிவரும் காரைநகர் பகுதி கடற்ருெழி லாளர்கள் தமக்கென தனி யானதொரு கூட்டுறவுச்சங் கம் நிறுவப்படவேண்டும் என்று நீண்டகாலமாக கோரி வந்துள்ளனர்.

# “மூன்று முடிச்சுகளையும் அவிழ்ப்பவர்கள் யார்?”

## கம்யூ. கட்சிப்பிரமுகர் கேட்கிருர்

(யாழ்ப்பாணம்)

“ஜனுதிபதி தேர்தலில் போட்டியிடும் திரு. குமார் பொன்னம்பலம் தனித்தமிழ் நாடு அமைப்பதற்கான ஆணை யைக் கோருகின்ருர் ஆனல் அவருக்கு அளிக்கப்படும் வாக்கு தனித் தமிழ்நாட்டுக் கோரிக் கைக்கு எதிராகக்கணிக்கப்படு மென நல்லூர் பாராளுமன்ற உறுப்பினரும், தமிழர்விடு தலைக் கூட்டணித் தலைவரு மான திரு. மு சிவசிதம்பரம் கூறுகின்ருர். தமிழர்விடுதலைக் கூட்டணியின் முப்பெரும் தலைவர்களுள் ஒருவரும் இன் றும் உயிருடன் இருப்பவரும் அப்பதவியிலிருந்து நீக்கப் படாதவரும் ஐக்கியதேசியக் கட்சி அரசில் அமைச்சருமான திரு. தொண்டமான் ஜனுதி பதி தேர்தலில் திரு. ஜே ஆர். ஜெயவர்த்தனவை ஆதரித்து வருகின்ருர்”.

இவ்வாறு காங்கேசன்துறை யில் நடைபெற்ற கருத்தரங் கில் இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் யாழ். மாவட்ட உதவி செயலாளர் திரு. எஸ். விஜயானந்தன் தெரிவித்தார்.

திரு. வே. மாரிமுத்து தலை மையில் நடைபெற்ற கருத்த ரங்கில் அவர்மேலும் பேசுகை யில் கூறியதாவது:

இன்றைய ஜனுதிபதித் தேர் தலில் இருந்து ஒதுங்க வேண் டுமென தமிழர் விடுதலைக்கூட் டணியினர் கேட்கின்றனர். இவை மூன்றும் ஒரேநாடகத் தின் வெவ்வேறு அம்சங்களோ என வாக்காளர்கள் சந்தேகப் பட இடமுண்டு. எனவே இந்த மூன்று முடிச்சுக்களையும் அவிழ் ப்பவர்கள் யார்? மூன்று பகுதி யினரும் இம்மாதம 20ம் திக திக்கு முன்பு இதனை தெளிவு படுத்த வேண்டும் பொதுமக் கள் தமது மனச்சாட்சியின்படி வாக்களிக்க தவறக்கூடாது.

# சிரமதானம்

[மன்ஞர்]

தலைமன்ஞர் மேற்கு பொது விளையாட்டு மைதானம் தலை மன்ஞர் கிராமோதய சபையி ஞல் சிரமதானமூலம் புன ரமைக்கப்பட்டது இச் சிரம தானவேலையை தலைமன்ஞர் விசேடசேவை அலுவலர் திரு. தோமஸ் மிராண்டா தேசியக் கொடி ஏற்றி ஆரம்பித்துவைத் தார். தலைமன்ஞர் கிராமோ தய சபைத் தலைவர் திரு. அல் பிரட் சில்வா தலைமையில் நடைபெற்ற இச்சிரமதான வேலையில் தலைமன்ஞர் பியர், தலைமன்ஞர் ஸ்ரேசன் பகுதி இளைஞர், யுவதிகளுட்படச் சுமார் 150 தொண்டர்கள் ஈடு பட்டனர். இவர்களுடன் 3 டிராக்டர்களும் சிரமதானப் பணியில்ஈடுபடுத்தப்பட்டனர்.

# நீயும் நினைத்துப்பார் தமிழா!

‘ஊரெல்லாம் நமதூரே!
உலக மக்களெல்லாம்
உறவினரே! நமக்கென மூன்
உரைத்தவன் ஓர்தமிழன்!
சீரோங்கு தமிழ்ப்புலவன்
கணியன் பூங்குன்றன்’
செப்பிடுபேர் உலகெங்கும்
சென்று நின்று வாழும்;

இறவாது பல்லாண்டு
வாழ்வளிக்கும் இனிய
ஏற்றமுறம் ஒரு நெல்லிக்
கனி கிடைத்த ஏந்தல்
அறம் வாழ அறிவளிக்கும்
ஔவைக்கே ஈந்தான்
அவனும் ஒரு தமிழனடா!
அதிகமான் அவன்பேர்!

தாவியே படர்வதற்குக்
கொழுகொம்பு இன்றி
தனிக்காட்டில் தழைத் தசைந்து
தளர்ந்த முல்லைக்கொடியன்
மேவுதுயர் கண்டுகண்ணீர்
விட்டிரங்கி இறங்கி
விரைந்துதன்தேர் கொழுகொம்பா
விட்டவனும் தமிழன்!

கானகத்து மயில் குளிரால்
கலங் கு) அகவல் கேட்டுக்
கடுங்குளிரைத் தீர்த்திடவே
கடிதோடிச் சென்று
தான்போர்த்த தனிப்போர்வை
தனை மயில்மேல் போர்த்த
தண்ணளி வெண்குடைவேந்தன்
பேகனும் ஓர் தமிழன்!

பரங்குன்றில் முருகனடி
பணிந்து பதம் பாடிப்
பரம் பொருளே! பொருளோடு
பொன் போகம் வேண்டாம்!
நிரம்பும் ‘அருள் அறம் அன்பு
நீயருள்க என்றே
நின்றவனும் ஒருவே ன்!
தமிழன் இளவெயினன்.

தனக்கென்று வாழாத
தனிப்பண்பு தமிழன்
தலையாய பெரும்பணபு
சங்கத்துச் சான்ருே?
நினைப்பும் அது! வாழ்வும் அது!
நேய மன்னர் மக்கள்
நெஞ்சத்து நிலவி து!
நினைத்துப்பார் தமிழா!

வித்துவான் சி. ஆறுமுகம்

★ ஜனதிபதி வேட்பாளர்களின் வானெலி உரைகள்

# ஐ.தே.க. உருவாக்கிய அரசியல் சட்டங்களை கிழித்தெறிவோம்

-- ரேகணவிஜேவீரா

(கொழும்பு)

''கடந்த முப்பத்தைந்து வருடங்களாக நாம் இலங்கையின் ஆட்சிப்பொறுப்பை மாறி மாறி இரண்டு முதலாளித்துவ கட்சிகளிடமே ஒப்படைத்தோம். இதனுல் இந்நாட்டு உழைக்கும் மக்கள் முகம் கொடுக்க நேர்ந்துள்ள அத்தியாவசிய பாவனைப்பொருட்களின் விலை உயர்வு, வேலை இல்லாப்பிரச்னை, கல்விப் பிரச்னை. சுகாதாரப்பிரச்னை, தேசிய இனப்பிரச்னை, நாடற்றோர்பிரச்னை முதலான பல்வேறு பிரச்னைகளுக்கு தீர்வு கிடைத்துள்ளதா? நிச்சயமாக இல்லை. இவ்விரண்டு முதலாளித்துவ கட்சிகளும் இப்பிரச்னைகளை போட்டி போட்டுக் கொண்டு அதிகரித்துள்ளதையேவரலாறு எமக்கு காட்டுகின்றது. இவ்வரலாற்றில் இருந்து படிப்பினை பெற்றுக்கொண்டநாம் ஏழைஎளிய உழைக்கும் மக்களின் அடிப்படை பிரச்னைகளை தீர்ப்பதற்காகவே மக்கள் விடுதலை முன்னணியை கட்டியமைத்தோம். இதனுல் கலக்கமடைந்தஇம் முதலாளித்துவ கட்சிகளும் அவர்களின் ஊதுகுழலுமான தேசிய பத்திரிகைகளும்எமக்கு எதிராக நான் ஒரு இனவாதி எனவும் நாம்பயங்கரவாதிகள் எனவும் நாம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன் குழந்தைகளையும் முதுமையடைந்தோரையும் கொலை செய்வோம் என்று வீண் புரளியை மக்கள் மத்தியில் பரப்பியுள்ளனர். இதில் உண்மை உண்டா? இல்லை! நிச்சயமாக இல்லை! எம்மையும் எமது இயக்கத்தையும் உங்களிடம் இருந்து தூரவிலக்கிவைப்பதற்கே இவர்கள் இவ்வாருன பொய்பிரச்சாரங்களை கட்டவிழ்த்து விட்டனர்.'' என்று மக்கள் விடுதலை முன்னணித் தலைவர் திரு. ரேகணவிஜேவீரா வானெலியில் ஆற்றிய உரையில் குறிப்பிட்டார். ஜனதிபதி தேர்தலில் வேட்பாளராகப் போட்டியிடும் திரு. ரேகணவிஜேவீரா மேலும் கூறியதாவது.

எமது ஆட்சியில் குழந்தைகளை தேசிய செல்வமாக கணித்து பேணிவளர்ப்பதே எமது சொள்கையே தவிர குழந்தைகளை கருவிலேயே அழிக்குமாறு பிரச்சாரம் செய்வதல்ல. மேலும்கைகால்களில் வலுவிழந்து உழைக்கமுடியாது தமது பிள்ளைகளை நம்பி வாழும் துர்ப்பாக்கிய நிலையை மாற்றியமைத்து முதுமையடைந்தவர்கள் சுகத்துடன் வாழக்கூடிய விதத்தில் ஓர் ஓய்வூதியத்திட்டத்தைஏற்படுத்துவது எமது கொள்கையே தவிரமுதுமையடைந்தவர்களை கொல்பவன் அல்ல.

### நான் அல்ல

பலநூறு ஆண்டுகளாக இந்நாட்டுக்காக உழைத்து உழைத்து ஓடாகியுள்ள மலையக வாழ் தொழிலாளர்களின் வாக்குரிமையை, பிரஜாவுரிமையை பறித்தவன் அல்ல நான். தமிழ்பேசும் மக்களின் பிரச்னைகள்தீர்க்கப்படுவதற்கு எதிராக பாதயாத்திரை சென்றவன் அல்ல நான் சண்டை என்ருல் சண்டை,சமாதானம் என்ருல்சமாதனம்என்றுதமிழ் பேசும் மக்களைப் பார்த்து அறைகூவல் விடுத்தவன்அல்ல நான். அடிக்கடி உருவாக்கப்

(7–ம் பக்கம் பார்க்க)

## வவனியா பஸ்நிலையத்தின் 'பரிதாபம்'

(வவனியா

மாரிமழை பெய்யஆரம்பித்துள்ள இவ்வேளையில் வவனியா தற்காலிக பஸ்நிலையம் சேறும், சகதியுமாக காட்சியளிக்கிறது.

இதனுல் பிரயாணிகள் கஷ்டப்படவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. மழை ஓய்ந்தும் பஸ்நிலையம் ஒரே வெள்ளமாகக் காணப்படுகிறது.

# தனிநாடு லட்சியத்துக்கு வாக்களியுங்கள்!

## தமிழ் மக்களிடம் கோருகிருர் குமார்

(கொழும்பு)

''ஆட்சி உரிமை உள்ள ஓர் தேசிய இனம் ஆட்சிக்காக நடைபெறும் தேர்தல் பேராட்டத்தில் பங்கு கொள்ளாமல் விட்டுவிடுவது முடியாத காரியமாகும். பங்கு கொள்ளாமல் விடுவது என்பது ஆட்சி உரிமையை கைவிடுவதாகவே முடியும். எனவேதான் தமிழ்தேசிய இனத்தைச் சேர்ந்த ஒருவர் தனது இனத்தின் உரிமையை வலியுறுத்தவாவது இத் தேர்தலில் பங்கு பறறவேண்டும். தமிழ்தேசிய இனத்தின் ஒற்றுமையையும், பலத்தையும், இலட்சிய உறுதியையும் எடுத்துக்காட்ட இத்தேர்தலை தமிழ் தேசிய இனம் பயன்படுத்த வேண்டும்',.

என்று அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சி சார்பில் ஜனதிபதி வேட்பாளராகப் போட்டியிடும் திரு. குமார் பொன்னம்பலம் வானெலியில் நிகழ்த்திய உரையில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது:-

''தமிழ்மகன் ஒருவன் இத் தேர்தலில் போட்டியிடுவதால் இதுவரை சாலமும் இத்தீவை ஆட்சிசெய்த கட்சிகள் பகடைக் காய்களாகத் தமிழினத்தைப் பயன்படுத்தி வந்ததைத் தவிர்த்துக்கொள்ளமுடியும். ஆட்சி செய்த கட்சிகளை ஆதரிப்பதன்மூலம் பிரச்னைகளுக்கு ஆளாவதை அத் தமிழினம் தவிர்த்துக் கொள்வதற்குத் தமிழ் மகன் ஒருவன் போட்டியிடுவது வாய்ப்பளிக்கின்றது தன்னினத்தைச் சேர்ந்த ஒருவரை ஒருவர் ஆதரிப்பதையிட்டு பிறஇனத்தவர் குறை சொல்லவோ, கினங்கொள்ளவோ முடியாது.

''போர் என்ருல் போர், சமாதானம் என்ருல் சமாதானம் என்று கூறியவர்களுக்கு நாங்கள் எதற்கும் தயார் என நெஞ்சு நிமிர்ந்து சொல்வதற்கு தமிழ் தேசிய

7ம் பக்கம் பார்க்க)

# "கோவிந்தனுக வாழ்ந்தவன்நான்!'

## டாக்டர் கொல்வின் கூறுகிருர்

[கொழும்பு

''தமிழ்பேசும் மக்களுக்கு அவர்கள் தாய்மொழியான தமிழ் மொழியிலேயே நான் இன்று பேச விரும்புகிறேன். கடந்த மகாயுத்தத்தின்போது ஏகாதிபத்திய சிறையில்நீண்ட பல நாட்களை நான் கழிக்க நேரிட்டபோது எழுத்து முதலாக தமிழ் மொழியை நாள் கற்க முற்பட்டேன். ஆனுல் சிறையிலிருந்து தப்பி தலைமறைவாகி ஏகாதிபத்தியத்துக்கு எதிரான போராட்டத்தை இலங்கையில் மட்டும் அன்றி இந்தியாவிலும் முழுமையாக நான்கு ஆண்டுகள் நான் செலவிட வேண்டியிருந்ததால் தமிழ் கற்கும் எனது முயற்சி பெரிதும் பயனளிக்கவில்லை. முயன்றும் தமிழ்கற்க முடியாமல் போனதும் இன்று உங்கள் மொழியிலேயே உங்களுடன் உரையாட முடியாதிருப்பதும் எனது துர்ப்பாக்கியமே'' என்று ஜனதிபதி தேர்தலில் ல ச. ச கட்சி வேட்பாளர் கலாநிதி கொல்வின் ஆர். டி. சில்வா வானெலியில் பேசுகையில் குறிப்பிட்டார். அவர் மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

தலைமறைவாக வாழ்ந்த காலத்தில் நான் எடுத்துக்கொண்ட பெயர் சீ. ஆர். கோவிந்தனுகும். 1940 ஆம் ஆண்டு சனவரி மாதம் 7 ஆந் திகதி பொலிசாரினுல் சுட்டுக் கொல்லப்பட்ட முல்லோயாத் தோட்டத்தைச் சேர்ந்த வேலைநிறுத்தஞ் செய்த

[7–ம் பக்கம் பார்க்க]


அடுத்த R. P G – II – ஆர். பி. ஜி. II
Computer Programming Course

கம்பியூட்டர் நிகழ்ச்சிமுறைப்
பயிற்சிநெறி

IBM System/34 Computer
(I. B. M. முறைமை 34 R. P. G. II கம்பியூட்டர்
நிகழ்ச்சிமுறைப் பயிற்சிநெறி)
34 R. P. G. II நிகழ்ச்சிமுறையினைக் கற்று கம்பியூட்டர்
விற்பன்னராகுங்கள்

பயிற்சி முறை: 18-10-1982 திங்கட்கிழமை முதல் நான்குமாதப் பயிற்சி வகுப்புகள் ஆரம்பமாகின்றன.
நிலை i எண்முறைக் கம்பியூட்டருக்கு அறிமுகப்படுத்தல்.
நிலை ii நிகழ்ச்சி முறை பற்றிய எண்ணக்கருவூட்டம்.
நிலை iii R. P. G. 11 நிகழ்ச்சி முறையிடல்.
நிலை iv விடயப்படிப்பு PRACTICAL TRAINNING ON COMPUTER.
விரிவுரைகள்: இங்கிலாந்தில் பயிற்சி பெற்ற எந்திரிமார்களும், தொழில்நுட்ப விற்பன்னர்களும், பயிற்சியாளர்களும் விரிவுரை வழங்குவர்.
பயிற்சிக்கட்டணம்: ரூபா 6,000/- மட்டுமே.
கல்வித்தகைமை: க. பொ. த. (சாதாரணம்) கணிதம்-திறமைச்சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.
தெரிவு: உளச்சார்புப் பரீட்சையின் தேர்வு அடிப்படையில் தெரிவு செய்யப்படுவர்.

R P. G. II நிகழ்ச்சி முறைப் பயிற்சி பெற்ற
விற்பன்னர்கட்கு இலங்கையில் மட்டுமின்றி அகிலஉலகத்திலும்
வேலைவாய்ப்பு உண்டு.
தொடர்பு கொள்ளவேண்டியது:
GLOBAL COMPUTERS LTD.
குளோபல் கம்பியூட்டர்ஸ்
லிமிட்டெட்,
இல. 14, 1/1, ஸ்ரப்ஸ் பிளேஸ், கொழும்பு 5.
14 1/1 Stubbes Place, Colombo 5.
தொலை தொடர்பு: 580551
பிறர் வாயாற் கூறுவதை குளோபல் செயற்படுத்தும்.
மேலும் விபரங்கட்கு-
குளோபல் கொம்யூனிகேஷன்ஸ் லிமிட்.
(யாழ். கூட்டுறவு பன்முகப் பணிமனைக் கட்டிடம்)
127, கே. கே எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

## ஒத்துழைப்பிலே..

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

கராஜா, சி. இரத்தினவாசகம் எஸ் முத்துலிங்கம், த. அமிர்தலிங்கம், எஸ் குமரசிவம், பொ. தம்பிராசா. வி ரி தவராசா, திருமதி, ச. சத்திவேல், கோ. குழந்தைவேலு, எஸ். டானியல்

கணக்குப் பரிசோதர்களாக திரு. எஸ். சூடாமணி, திரு. கு. கிட்டிணசாமி, த. சுரேந்திரம் ஆகிய மூவரும் தெரிவு செய்யப்பட்டனர்

ஹரன் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
முத்துராமன்—காஞ்சனு
காதலிக்க நேரமில்லை
(புதிய பிரதி)

மனோகரா [யாழ் நகர்]
தினசரி 4 காட்சிகள்
பாக்கியராஜாவின்
புதிய வார்ப்புகள்
(கலர்)

சில தினங்கள் மட்டும்
வெஸ்லி (மானிப்பாய்)
தினசரி 6-15, 9-15
சனி, ஞாயிறு 2-30
கமலஹாசன்
ராஜபார்வை

ராஜா யாழ்.நகர்
தினசரி 4 காட்சிகள்
போடியார்- என்ன பிள்ளை கந்தப்பு வாத்தியார்வீடு மௌனமாக இருக்கு.
தங்கம்மா- இன்று அம்மான் அவர்கள் வீட்டை பூட்டி போட்டு மௌன கீதம் படம் பார்க்கப் போய்விட்டார்கள்.
பாக்கியராஜ்-சரிதா
மௌன கீதங்கள்
(ஈஸ்ட்மன் கலர்)
டைரக்ஷன்: பாக்கியராஜ்

## தனிநாடு லட்சியத்துக்கு...

[6ம் பக்கத் தொடர்ச்சி]

இனத்தைச் சேர்ந்த ஒருவர் தேர்தலில் போட்டியிடுவது அவசியமானதொன்றாகும்.

### ஏன் போட்டி?

''தமிழ் தேசிய இனம் சுய நிர்ணய அடிப்படையில் தனது முடிவினை சர்வஜன வாக்கெடுப்பின்மூலம் வெளிப்படுத்த இத்தேர்தல் பெரும் வாய்ப்பளிக்கின்றது. பாராளுமன்றத்தேர்தல் போல் அல்லாமல் இத்தீவு முழுவதும் ஒரேயொருதேர்தல் தொகுதியாக வருகின்றபடியால் இங்கு வாழும் தமிழ் தேசிய இனத்தினர் அனைவரும் தமதுமுடிவினை வெளிப்படுத்த இது ஒரு நல்ல தருணமாகும். இத்தீவில்ஆட்சிக்குவரும் எந்த ஒரு அரசாங்கமும் சர்வஜன வாக்கெடுப்பொன்றினை நடத்தி தமிழ் தேசிய இனத்தின் சுய நிர்ணயம் என்ன என்பதை உலகறியச் செய்ய முன்வரலாமென்பதால் தமிழ் தேசிய இனத்தின் சுதந்திர தாகத்தை வெளிப்படுத்த இத்தேர்தலை தமிழ்தேசிய இனம் சர்வஜன வாக்கெடுப்பாகப் பயன்படுத்த வேண்டும் இதற்கு வாய்ப்பளிக்க வேண்டுமென்பதற்காகவே நான் இத்தேர்தலில் போட்டியிடுகின்றேன்,

இத்தேர்தலை சர்வஜனவாக்கெடுப்பாகக் கருதி தனிநாடு இலட்சியத்தை தமிழ்மக்கள் கூடுதலான ஆதரவினைத்தருவதன்மூலம் சுதந்திர தனிநாட்டு இலட்சியத்திற்கு தமிழ் மக்களில் பலர் ஏற்கவில்லையென்று அரசாங்கம் செய்துவரும் பொய்ப்பிரச்சாரத்தினை முறியடித்துக்காட்டவேண்டும்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு வெளியேவாழும் தமிழ தேசிய இனமக்களும். கண்டிப் பிரதேச தமிழ் மக்களும் மலையகத் தமிழ்மக்களும் இஸ்லாமிய மக்களும் கிழக்கு மாகாணத்தமிழ் மக்களும் தனிநாட்டுக் கோரிக்கைக்குக்குறைந்த அளவிலேயே ஆதரவுதருவதாக ஆட்சியாளர்கள்செய்துவரும் பிரச்சாரத்திற்கு எதிராக இம்மக்கள் இம்முறை தனிநாடு இலட்சியத்திற்குக் கூடுதலான ஆதரவினைத்தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

தனிநாடு இலட்சியத்துக்குக் குறைந்த ஒற்றையாட்சியின் கீழியங்கும் மாவட்டசபைகளை ஏற்று தமிழ்மக்கள் வாக்களித்துள்ளமையாலும் அவர்கள்தங்கள் இலட்சியத்திலிருந்து விலகிவருகிறார்கள் என்று ஆட்சியாளர்கள் பிரசாரம் செய்துவருகின்றனர். இதனை முறியடிக்க தனிநாடு இலட்சியத்திற்கு ஆதரவாகத் தமிழ் மக்கள் தங்கள் தீர்ப்பினை தருவார்கள் என்று நம்புகின்றேன்.

குறைந்த வாக்குகள் கிடைக்கும் என்று பிரசாரம் செய்பவர்கள் தான் தனிநாடு இலட்சியத்துக்கு வாக்களிக்கவேண்டாம் என்று கோரிவருகிறார்கள் குறைந்துவிடுமே என்ற கவலை தனிநாடு இலட்சியத்தில் அக்கறை உண்மையில் இவர்களுக்கு இருக்குமானால் வாக்குகளைக் குறையவிடாது, உற்சாகமாக உழைத்து முன்னர் எப்போதும் இல்ல தஅள வில் மக்கள் தமிழ்ஈழ இலட்சியத்தினை ஆதரிக்கிறார்கள் என்ற நிலையை ஏற்படுத்த முன்வரவேண்டும். இதைச் செய்யாமல் வேறுவிதமாக இவர்கள் இயங்குவார்களேயானால் அவர்கள் தனிநாட்டுக்கு எதிரானவர்கள் என்றே சொல்லவேண்டும். இவர்களது நடத்தை இனத்திற்குச் செய்யும் துரோகமாகும்.

நான் தேர்தலில் போட்டியிடுவது தமிழ்தேசிய இனத்திற்காக இத்தேர்தலை சர்வஜன வாக்கெடுப்பாகக் கருதி சுதந்திரத்தனிநாடு இலட்சியத்துக்கு வாக்களிக்கும்படி நான் தமிழ்மக்களை கேட்டுக்கொள்கின்றேன். சுதந்திரத் தனிநாடு இலட்சியத்துக்கு ஏழு லட்சத்திற்கு மேற்பட்ட வாக்குகளை தமிழ்மக்கள் அளிப்பார்களேயானால் நான் உடனடியாக தமிழ்பேசும் மக்களின் பிரதிநிதிகளைக் கொண்ட தமிழ்ஈழத் தேசிய மன்றத்தை கூட்டுவித்து தனிநாட்டுக்காகஅரசியலமைப்பை உருவாக்க உழைப்போம் என்று உறுதிகூறுகின்றேன்''.

றீகல் (யாழ்.நகர்)
4-வது ஹவுஸ்புல் வாரம். 10-30, 2-30, 6-15, 9-30
ரஜனிகாந்த்-ரதி, ஜெய்சங்கர்
முரட்டுக்காளை
(கலர்)

சாந்தி (யாழ்.நகர்)
Daily 5 shows
HOT STUFF
கடைசித்தினம் 14-10-82
15 முதல்
பாதைமாறிய பருவங்கள்

ராணி (யாழ் நகர்)
தினசரி 5 காட்சிகள்
BEAR ISLAND

வெலிங்டன் [யாழ்ப்பாணம்]
தினசரி 4 காட்சிகள்
ரயில் பயணங்களில்

லிடோ [யாழ்ப்பாணம்]
தினசரி 5 காட்சிகள்
VAMPIRE CIRCUS

வின்ஸர் (யாழ். நகர்)
குறிப்பிட்ட சிலதினங்கள்மட்டும்
2-வது மாதமாக
தினசரி 4 காட்சிகள்
சந்திரசேகர்--சுபாஷினி
பாலைவனச் சோலை

ஸ்ரீதர் (யாழ்.நகர்)
கடைசி 2 தினங்கள்
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர்-மஞ்சுளா-லதா
நேற்று இன்று நாளை
16-10-82 — 24-10-82
A BRIDGE TOO FAR (War Film)

## ஐ. தே. க. ...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

பட்ட இனக்கலவரங்களுக்கு எண்ணெய் வார்த்தவன் அல்ல நான். யாழ்ப்பாணநூலகத்துக்கு தீவைத்தவன் நான் அல்ல. கேணல் சேரம், கேணல் உடுகம முதலானோரை யாழ்ப்பாணத்துக்கு அனுப்பியவன் அல்ல நான். தமிழ் பேசும் மாணவர்களின்கல்வியைபறிப்பதற்கு தரப்படுத்தலை அமுல்படுத்தியவன் அல்ல நான். மேலும் தமிழ்பேசும் மக்களை இரண்டாந்தர பிரஜைகளாக கருதும் ஆயிரத்தி தொள்ளாயிரத்து எழுபத்தி இரண்டிலும் ஆயிரத்தி தொள்ளாயிரத்தி எழுபத்தி எட்டிலும் உருவாக்கப்பட்ட அரசியல் அமைப்புச்சட்டங்களை ஆக்கியவன் அல்ல நான்.

பல்வேறுமொழிகளைப்பேசும் பல்வேறு மதங்களை வழிபடும் மக்கள் வாழும் ஒரு நாடு முன்னேறவேண்டுமாயின் அதற்கான ஒரே ஒருவழி இதுவே· ஒருமொழிக்கோ, அல்லது ஒரு மதத்துக்கோ, அல்லது இனத்துக்கோ விசேட சலுகைகள் வழங்கப்படக்கூடாது. என்பதை தீவிரமாக விசுவாசிக்கும் நாம் அவ்வாறு எந்தவோர் இனத்துக்கும் மொழிக்கும் விஷேட சலுகைகள் வழங்கப்பட்டிருப்பின் உடனடியாக அதனை அரசியல் அமைப்புச்சட்டத்தில் இருந்தே நீக்க வேண்டும் என்ற தீவிர கொள்கையுடையோர் நாம்.

ஜனாதிபதி தேர்தலை பகிஷ்கரிக்குமாறு சில இயக்கங்கள் வேண்டுகோள் விடுக்கின்றன. பகிஷ்கரிப்பு என்பதன் மறைமுகமான நோக்கம் ஆட்சியாளர்களுக்கு மறைமுகமாக ஆதரவு அளிப்பதே ஆயிரத்தி தொள்ளாயிரத்தி எழுபத்தி இரண்டிலும், ஆயிரத்திதொள்ளாயிரத்தி எழுபத்தி எட்டிலும் உருவாக்கப்பட்ட அரசியல் அமைப்பு சட்டங்களை கிழித்தெறிய வேண்டுமாயின் எனக்கு வாக்களியுங்கள் இல்லை இம்மக்கள் விரோத அரசியல் அமைப்புச்சட்டங்களை நீங்கள் ஏற்றுக் கொள்கிறீர்களாயின் தேர்தலை பகிஷ்கரியுங்கள். அடக்குமுறை சட்டங்களான பயங்கரவாதஎதிர்ப்புச்சட்டம் புலிப்படை எதிர்ப்புச்சட்டம், அத்தியாவசிய சேவைச்சட்டம் அவசரகாலச்சட்டம், பொது ஜனபாதுகாப்புசட்டம் முதலான மக்கள் விரோத சட்டங்களை நீங்கள் எதிர்க்கிறீர்களாயின் எனக்கு வாக்களியுங்கள்

## கோவிந்தனை..

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

தொழிலாளர் ஒருவரின் பெயரே இது. தேமூர் கோவிந்தனின் மரணம் தொடர்பாக ஆணைக்குழுவின் விசாரணையின்போது அவர் விதவைக்காகத்தோன்றி நான் வாதாடினேன் என்பதனை மிகப் பெருமையுடன் நினைவு கூர்கிறேன்.

''ஐ. தே. கட்சியின் காடையர்களினால் கட்டவிழ்த்து விடப்படும்வன்முறைச் செயற்களும் அடக்குமுறை நடவடிக்கைகளும் இந்த ஐ தே. கட்சியின் ஐந்தாண்டு ஆட்சிக் காலத்தின் முக்கிய அம்சங்களாக அமைந்துள்ளன நாட்டின் எல்லாப் பகுதியிலும் எதிர்த்தரப்பினர் மீது அடக்குமுறையைக் கையாள்வது ஜே. ஆர் ஜெயவர்த்தனவின் ஆட்சியின் கொள்கையாகவே அமைந்துள்ளது. இத்தேர்தலில் ஜனாதிபதியாக நான் மக்களால தெரிவு செய்யப்பட்டால் அரசியல் அமைப்பு பிரதம மந்திரி முறையாகவோ ஜனாதிபதி முறையாகவோ இருப்பினும் அந்த ஐந்து ஆண்டு காலத்திலும் வெளிப்படையாகவே செயற்பட்டு வந்த ஐ. தே கட்சியினால் இயக்கப்பட்டுவரும் தனிப்பட்ட பயங்கரவாத அமைப்பினை ஒழித்துக் கட்டுவதே எனது உடனடியானகருமமாக அமையும். அத்தகைய பயங்கரவாத அமைப்பு முறை நிலவவில்லையென்றால் பிரபல்யம் மிக்க யாழ் நூலகம் இன்று தொடர்ந்தும் மணம்வீசிப் பிரகாசித்துக் கொண்டிருக்கும்.

''காலஞ்சென்ற எனது நெருங்கிய நண்பரும், சகலமக்களையும் ஆறாத் துயரில் ஆழ்த்திய, மறைந்த என். எம். பெரேரா அவர்களின் முயர்சியினால் தொடக்கி வைக்கப்பட்ட கிராமியக் கொள்கையின் சில அம்சங்களை இன்று உங்களுக்கு நினைவுகூர நான் விரும்புகின்றேன்· நிதிஅமைச்சராக இருந்த போது அவர் கொண்டுவந்த துணைப் பயிர்களுள் உத்தரவாத விலைத்திட்டத்தை யாழ் வாழ் விவசாயி உட்பட எந்த விவசாயியும் போற்றாமல் இருக்கமுடியாது. யாழ். குடாநாட்டிலும் சரி, இந்நாட்டின் எப்பகுதியிலும் சரி, வாழும் தாழ்நிலையிலுள்ளவர்களின் பொருளாதாரமேம்பாட்டில் ஆழ்ந்த அக்கறை கொண்டவர் கலாநிதி என். எம். பெரேரா அவர்கள் என்பதை ஒருவராலும் மறக்க முடியாது.

''நிம்மதியற்று வாழும் சிறுபான்மையோரின் மேல் அரசின் அதிகாரத்தைத் திணிக்க ஏற்படுத்திய அரசாங்கக் கொள்கைகளினால் பாதிக்கப்படுவதை எவரும் அறிந்ததே. பயங்கரமான இந்நிலைக்கு கூடிய விரைவில் முடிவு காண்பது மக்கள் யாவரினாலும் தேர்ந்தெடுக்கப்படும் ஜனாதிபதியின் தவிர்க்க முடியாத கருமமாகும். தான்தோன்றித் தனமான தன்னாதிக்கத்துக்குச் சமமான அவாது 5 ஆண்டுகால ஆட்சியிலேயே பயங்கரமான இந்த ஆனால் பரிகாரம் காண கூடிய நிலைமை தோற்றுவிக்கப்பட்டது என்பதை ஜனாதிபதி ஜெயவர்த்தனவினால் மறுக்க முடியாது.

## இன்றைய பலன்

புரட்டாதி மாதம் 28ம் திகதி வியாழக்கிழமை (14—10—82)

மேடம்: இனபூசலின் மூலம் இதயபாரம் ஏற்படும் திடீர் முவுக்கு வருமாறு நிர்ப்பந்திக்கப்படுவீர்கள் எதையும் தாங்கும் இதயத்துடன் செயலாற்றவும்.

இடபம்: தன்மானவாழ்வு இன்று தாராளமாகக் கிடைக்கும் நீண்ட நாள்கடன் இன்று நிவர்த்தியாகும். வியப்பூட்டும் செய்தியும் கிடைக்கும்.

மிதுனம்: குடும்பத்தில் குறைகேட்க நேரிடும் மறைமுகமாக நடத்திய காரியம் ஒன்று இன்று அம்பலமாகலாம பொறுமையே நன்று.

கடகம்; அறவளியில் நாட்டம் பிறக்கும் குடும்பத்தில் சுமூகமான நிலைதென்படும் எதிர்பார்த்த காரியம் ஒன்றுக்கு இன்று வழிகோலப்படலாம்.

சிங்கம்: இதயத்தில் இனிமை துள்ளும் வியாபார விருத்தியும் உண்டு பரந்த நோக்குடன் செயற்பட்டால் பாராட்டும் கிடைக்கும்.

கன்னி: இடர்கள் பல தாக்கும் இதயத்தில்எரிமலைகுமுறும் உதவி செய்ய போய் உபத்திரவத்தை அணைத்துக் கொள்வீர்கள் அமைதியே நன்று.

துலாம்: புதுமையான எண்ணங்களால் உர்தப்படுவீர்கள் உடலில் தனி உற்சாகம் பிறக்கும் மற்றவர்கள் உங்கள் ஆற்றலை மெச்சுவர்.

விருட்சிகம்: சிந்தையில் குழப்பநிலை தென்படும் மனைவியின் உடல் நிலை சிறிது கவலையைத் தரலாம் செலவுகள் அளவுக்கு மிஞ்சியதாகவே இருக்கும்.

தனு: எதிர்பாராத திருத்தங்கள் இன்று வாழ்கையில் புதியமாற்றங்கள் உருவாகும் பெரியவர் ஒருவர் ஆதரவு கிடைக்கும்.

மகரம்: புதிய தொழில் குறித்து சிந்தனை உருவாகும். கூட்டுவியாபாரத்தில் சிந்தனை உருவாகும் சிலரது கவனம் திருப்பப்படலாம்.

கும்பம்; பலவழிகளில் பணவரவிற்கு இடமுண்டு அறிஞர்கட்கு இன்று மகிழ்ச்சிகரமான தினம் பண பலமும் உண்டாம்.

மீனம்; வாழ்க்கையில் புதிரான நிலைதென்படும் ஆத்திரப்பட்டுவதன் மூலம் அருமையான சந்தர்ப்பத்தை இளக்க நேரிடும் மேலிடத்து செல்வாக்கு பாதிக்கப்படும்.

சோதிடக் கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

## சம்பத்திரிசியார் அமோக வெற்றி

[யாழ்ப்பாணம்]

சம் பத்திரிசியார் கல்லூரிக்கும் மன்னார் புனித சவேரியார் கல்லூரிக்குமிடையில் நேற்று முன்தினம் நடைபெற்ற உதைபந்தாட்ட மோதலில் சம்பத்திசியார் கல்லூரி முதலாவது ஆட்டத்தில் 7-0 கோல்களால் அமோக வெற்றியீட்டியது செல்வன் றெக்சசன் 5 கோல்களையும் செல்வன் ஸ்டீன்பேர்க் 2 கோல்களையும் போட்டார்கள்

இரண்டாவது ஆட்டம் மிக விறுவிறுப்பாக நடைபெற்று 2-2 என்ற கோல் வீதத்தில் வெற்றி தோல்வியின்றி ஆட்டம் முடிவடைந்ததுசம்பத்திரியார்கல்லூரி சார்பில் இறுதி நேரத்தில் செல்வன் அரியராஜா அடித்த கோல் ஆட்டத்தை வெற்றிதோல்வியின்றி முடிவடைய வைத்தது. (ப)

# சகலருக்கும் வீட்டு வசதி ஆண்டாக 1987

## இலங்கையின் கோரிக்கை ஐ. நா.சபை அங்கீகாரம்

(கொழும்பு)

இலங்கையின் முயற்சியினால் ஐ நா.சபை 1987ம் ஆண்டை சகலருக்கும் வீட்டு வசதியளிக்கும் ஆண்டாகப் பிரகடனம் செய்துள்ளதாகப் பிரதமர் திரு. ஆர். பிரேமதாசா கொழும்பில் இன்று ஆரம்பித்துள்ள ஆசிய பிராந்திய வீடமைப்பு மாநாட்டில் தெரிவித்தார்.

இப்பிராந்தியமாநாடுமூன்று தினங்கள் தொடர்ந்து நடைபெறுகிறது வீடமைப்பு நிர்மாண அமைச்சின் செயலாளர் திரு ஆர். பாஸ்கரலிங்கமும், ஐ. நா வின் பிரதிநிதி திரு. பீட்டர் கிம்மும் இம்மாநாட்டின் தலைவர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்,

இலங்கையில் வீடமைப்புக்குத் தனியான வங்கி அமைக்கப்படவுள்ளதாகவும்குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கு வீடமைப்பு வசதிசெய்து கொடுப்பதற்கான திட்டங்கள் வகுக்கப்படுவதாகவும், சனத் தொகை அதிகரிப்பு, நகரங்களின் அதிகரிப்புகளுக்கு ஏற்ப வீட்டு வசதிகளை மக்களுக்கு ஏற்படுத்த இம்மாநாடு திட்டங்களையும் கொள்கைகளையும் வகுக்க உதவும் என்றும் பிரதமர் திரு. ஆர். பிரேமதாசா மேலும்தெரிவித்தார், (உ)

### விவசாயக் கடனுதவி:

## ரூ. 2 லட்சம் விவசாயிகள் திருப்பிச் செலுத்தவில்லை

[புலோலி]

''வடமராட்சிப் பகுதி விவசாயிகளின் நன்மைகருதி பருத்தித்துறை கிராமிய வங்கி மூலம் வழங்கப்பட்ட விவசாயக்கடனில் 1,71,350 ரூபாவும் புலோலி கிராமிய வங்கி மூலம் வழங்கப்பட்ட விவசாயக்கடனில் 28,500 ரூபாவும் உட்பட சுமார் இரண்டு லட்சம் ரூபா இதுவரை விவசாயிகளால் திருப்பி செலுத்தப்படவில்லை.

இவ்வாறு புலோலி மேற்கு சனசமூக நிலையத்தில் நடைபெற்ற பெரும்போக வேளாண்மைக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய பருத்தித்துறை மக்கள் வங்கி அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. எஸ். எஸ் சோமசுந்தரம் குறிப்பிட்டார்.

பருத்தித்துறை சமநலச் சேவைப்பெரும்பாக உத்தியோகத்தர் திரு. எஸ். பரமசிவராசா தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் பருத்தித்துறை, புலோலிமேற்கு, அல்வாய் வடக்கு, அல்வாய் மேற்கு பயிர்ச்செய்கை உத்தியோகத்தர் பிரிவு விவசாயிகள் கலந்துகொண்டனர்.

தொடர்ந்து உரையாற்றிய மக்கள் வங்கி அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. சோமசுந்தரம் குறிப்பிட்டதாவது:

''பருத்தித்துறை கிராமிய வங்கிமூலம் விவசாயிகளுக்கு விவசாயக் கடனாக வழங்கப்பட்ட 1,71,350 ரூபாவும் புலோலி கிராமியவங்கி மூலம் விவசாயக்கடனாக வழங்கப்பட்ட 28,238ரூபாவும் திருப்பி விவசாயிகளால் செலுத்தப்படாமல் இருப்பது கிராமிய வங்கி விவசாயிகளின் நன்மை கருதி மேற்கொள்ளவுள்ள பல சிறந்த முறைகளை நடைமுறைப்படுத்துவதில் தாமதத்தை ஏற்படுத்துகின்றது. இவ்வாறு செலுத்தாத சுமார் இரண்டு லட்சம் ரூபா விவசாயக் கடனை செலுத்தியதும் மீண்டும் கிராமிய வங்கி விவசாயிகளின் நன்மை கருதி பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் இதன் மூலம் விவசாயிகளின் வாழ்க்கை வளம்பெறுவதுடன் நாட்டின் அபிவிருத்தியும் மேம்படும்'' என்றார்.

கால்நடை வைத்திய அதிகாரி டாக்டர். த. கதிரவேலுப்பிள்ளை மிருக வளர்ப்பு பற்றிப் பேசினார். பயிர்ச்செய்கை உத்தியோகத்தர் திரு. க. சண்முகநாதன் நன்றியுரை கூறினார்.

### வடபகுதிக்கு

## அனுரா 16ல் விஜயம்

[யாழ்ப்பாணம்]

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி வேட்பாளர் திரு. ஹெக்டர் கொப்பேகடுவாவுக்கு ஆதரவு பெறும் நோக்கமாக பிரசாரம் செய்வதற்கு திரு. அனுரா பண்டாரநாயக்கா 16ம் திகதி வடகதிக்கு விஜயம் செய்யவுள்ளார். யாழ் நகர் உட்பட மற்றும் தொகுதிகளிலும் திரு, அனுரா பண்டாரநாயக்கா கலந்து கொண்டு உரையாற்றுவார். [மா]

### சாவகச்சேரியில்

## ஜே.ஆரை ஆதரித்துக் கருத்தரங்குகள்

[யாழ்ப்பாணம்]

சாவகச்சேரித் தொகுதியில் ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர் ஜனாதிபதி திரு. ஜே ஆர். ஜெயவர்த்தனவை ஆதரித்துக் கருத்தரங்குகள் நடத்தப்பட்டு வருகின்றன.

சாவகச்சேரித் தொகுதி அமைப்பாளர் திரு எஸ். எஸ். சண்முகலிங்கம், திரு. கே. வி பி. வேலாயுதபிள்ளை ஆகியோர் இக்கருத்தரங்குகளில் கலந்துகொண்டுஉரைநிகழ்த்தி வருகின்றனர். நாளை வெள்ளிக்கிழமை கொடிகாமம் சந்தை மைதானத்தில ஜனாதிபதி ஜே ஆர் ஜெயவர்த்தனவை ஆதரித்துப் பிரசார கூட்டம் நடைபெறவுள்ளது

## நூறு கருத்தரங்குகள்

[யாழ்ப்பாணம்]

ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வேட்பாளர் திரு. ஹெக்டர் கொப்பேகடுவவுக்கு ஆதரவு தேடும்முகமாக யாழ். மாவட்டத்தில் சுமார் நூறு கருத்தரங்குகள் நடாத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஒரு தொகுதியில் 10 கருத்தரங்குகள் வீதம் நடத்துவதற்கு வடபகுதி ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அமைப்பாளர்கள் முடிவுசெய்தற்கிணங்க கருத்தரங்குகள் நேற்று சில தொகுதிகளில் ஆரம்பமாகின

இக்கருத்தரங்குகளில் சுதந்திரக்கட்சி உறுப்பினர்கள், கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் ஆதரவு வழங்கும் இடதுசாரி தொழிற்சங்கப் பிரமுகர்கள் கலந்துகொண்டு உரை நிகழ்த்துவார்கள். (மா)

# “ஆற்றலும் தகுதியும் பெற்ற ஒரு தலைவர் ஜே. ஆர்.”

### கருத்தரங்கில் பேச்சு

[யாழ்ப்பாணம்]

''ஜனாதிபத் தேர்தலில் திரு. ஜே. ஆர். ஜெயவர்தனவுக்கு யாழ். மாவட்டத்தில் இப்பொழுது ஆதரவு அதிகரித்துவருகின்றது. ஜனாதிபதியின் கடிதங்களை நேரில் விநியோகிக்கும்போது, வாக்காளர்கள் காட்டும் ஆர்வத்தில் இருந்து இதனை உணரக் கூடியதாக இருக்கின்றது. இன்று சிறுபான்மை இனமக்களின் பிரச்னைகளை சுமூகமான முறையில் தீர்த்து வைக்க கூடிய தகுதியும் ஆற்றலும் வாய்ந்த ஒரே தலைவராக ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன விளங்கி வருகின்றார் தமிழ் மக்கள் தேர்தலைப் பகிஷ்கரிப்பதால் எதுவித பலனும் அடையப்போவதில்லை. வெளிநாட்டு வேலை வாய்ப்பு, வீடு, காணி விவசாயிகளும், தொழில் போன்ற வற்றை மேலும் விருத்தி செய்ய மீண்டும் திரு, ஜே. ஆர். ஜெயர்தனவே ஜனாதிபதியாக வரவேண்டும்''

யாழ்ப்பாணத் தொகுதி ஐ. தே. க. பிரதம அமைப்பாளர் திரு. ஆர் ஆர். நல்லையா யாழ். நகரில் நடைபெற்ற கருத்தரங்கில் மேற்கண்டவாறு கூறினார்.

பிரதம விருந்தினராக யாழ் மாவட்ட அமைச்சர் திரு. யூ. பி. விஜயக்கோன் கலந்து கொண்டார்.

திரு. நல்லையா தொடர்ந்து பேசுகையில் ஐ, தே. கட்சி ஆதரவாளர்களும் இளைஞர்களும் உற்சாகமாக வீடு, வீடாகச் சென்று ஆதரவைத் தேடி வருகின்றனர் என்றும் ஜனாதிபதியின் கடிதம் நேரில் வாக்காளர்களுக்கு கையளிக்கப்படுவதாகவும் கூறினார்.

## கோவை மகேசன் ரகசிய பொலிசாரினால் விசாரணை!

[யாழ்ப்பாணம்]

தமிழீழவிடுதலை அணியின் பொதுச்செயலாளர் திரு. கோவை மகேசன், இரகசியப் பொலிஸாரினால் சுமார் நாலரைமணி நேரம் விசாரணைக்குட்படுத்தப்பட்டபின்னர் விடுவிக்கப்பட்டார்.

கொழும்பிலிருந்து வந்த ரகசியப் பொலிஸ் அதிகாரிகள் யாழ். பொலிஸ் நிலையத்தில் வைத்து கோவை மகேசனை நேற்றுப்பகல் விசாரணைசெய்தனர்.

ஜனாதிபதி வடபகுதிக்குவருவதற்கு முன்னர், அவர் வருகையைப் பகிஷ்கரித்து ஹர்த்தால் அனுஷ்டிக்குமாறு துண்டுப்பிரசுரம் வெளியிட்டது சம்பந்தமாகவும் விசாரணை செய்யப்பட்டதாக அறியப்படுகிறது.

குறிப்பிட்ட துண்டுப்பிரசுரத்தில் இடம்பெற்ற கொலைசெய்யப்பட்ட இன்பம், எரிக்கப்பட்ட நூல்நிலையம், கடைகள் ஆகிய மூன்று 'புளக்'குகளையும் பெற்றுக்கொண்ட இரகசியப் பொலிஸ் அதிகாரிகள் அவற்றுக்கான 'ரசீது' ஒன்றை கோவை மகேசனுக்குக் கொடுத்ததாகவும் அறியப்படுகிறது.

இவரது வாக்குமூலத்தை 16 பக்கங்களில் இரகசியப் பொலிஸ் அதிகாரிகள் பதிவு செய்தனர்.

### ஈழவேந்தன் விசாரணை

தமிழீழ விடுதலை அணியின் நிர்வாகச் செயலாளர் திரு. ஈழவேந்தன் இன்று காலை இரகசியப் பொலிஸாரினால் விசாரணைக்கு அழைக்கப்பட்டுள்ளார்.

### லயன்ஸ்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

கதம்ப நிகழ்ச்சி நாளைமறுதினம் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

வரணியூரான்–கிறேஸிகோமளின் முதல்தடவையாக இணைந்து இக்கதம்ப நிகழ்ச்சியை வழங்குகின்றார்கள்

யாழ். லயன்ஸ் கழகத்தினர் சேவை நிதிக்காக ஒழுங்குசெய்துள்ள இக்கதம்பநிகழ்ச்சி சனிக்கிழமை மாலைநடைபெறுகிறது

### 4962 பேருக்கு...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

ம்பமான தபால்மூல வாக்களிப்பு முடிவுதிகதி இம்மாதம் 20ம் திகதியாகும். (மா)


# ஹோம் பிறுன்ஸ் லிமிட்டெட்

## புதிய உல்லாச பஸ்சேவை

தினசரி மாலை 8-30 மணி கொழும்பில் இருந்து----யாழ்ப்பாணத்துக்கு
தினசரி மாலை 8-00 மணி யாழ்ப்பாணத்தில் இருந்து-----கொழும்புக்கு
கண்ணியமான பாதுகாப்பான பஸ்சேவை

யாழ்ப்பாணத்தில் டிக்கற் பெறுமிடங்கள்:-

(1) ஹோம் பிறுன்ஸ் லிமிட்டெட்
இல: 82, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 24310

(2) யாழ். ஐக்கிய வியாபார சங்கம்
இல: 420, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
போன்: 22370—22438—22537

(3) யாழ். மெட்டல் சேல்ஸ் சென்ரர்
இல: 6, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 23596

(4) குயிக் ட்ரவல்ஸ் அன்ட் டூர்ஸ்
சரஸ்வதி கார்டின்ஸ், சேர்ச் லேன், சாவகச்சேரி;
தொலை பேசி இல; 22273. சாவகச்சேரி

கொழும்பில் டிக்கற் பெறுமிடங்கள்:

(1) ஹோம் பிறுன்ஸ் லிமிட்டெட்
இல: 463, காலி வீதி, கொள்ளுப்பிட்டி.
தொலைபேசி இல: 89190

(2) ரவீந்திரா ஸ்டோர்ஸ்
இல: 285, காலி வீதி, வெள்ளவத்தை.

(3) லங்கா பம்பே சுவீட் ஹவுஸ்,
இல.105, ஒல்கொட் மாவத்தை, புறக்கோட்டை.
தொலைபேசி இல; 22830

(4) ஸ்ரீமணிமலர் ஸ்டோர்ஸ்
இல: 157/2, ஸ்ரீகதிரேசன் வீதி, கொழும்பு—11
தொலைபேசி இல: 23277

(5) நியூ புஷ்பா ஸ்டோர்ஸ்
இல; 127, காலி வீதி. பம்பலப்பிட்டி.
தொலைபேசி இல:88866


### சிறிமாவுக்கு...

1ம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று அனுப்பிவைக்கப்பட்ட இத்தந்திகளில்; குறிப்பிட்ட பத்திரிகையொன்றில் வெளிவந்த செய்தியின் எதிரொலியாக, வாக்காளர்கள் மத்தியில் மனக்கசப்பு ஏற்பட வழிஉண்டாகும் என்றும், இது சம்பந்தமாக உடனடியாக விளக்கமான அறிக்கையை அப்பத்திரிகையில் பிரசுரிக்க நடவடிக்கை எடுக்குமாறும் கோரப்பட்டுள்ளது.

### பயப்கரவாத...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வழக்கு யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுப் பின்னர் பயங்கரவாதத்தடைச் சட்டத்தின் கீழ் விசாரணை நடத்த கொழும்பு மேல் நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டது.

விசாரணை நவம்பர் மாதம் 4-ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1982-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 14-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka. under numbre Q.B. 100236/81. Eelanaadu - P. O. Box, 49. Telegram: Eelanaadu, Telephone: 22389 — 24126.